பூம்புகார்ப் பத்தினி

ஆக்கியோன் :

க. சம்பந்தம் பிள்ளை, B.A. L.T.

[ஓய்வுபெற்ற கல்வித்துறை அலுவலர்]

அன்னையின் திருவடிகட்கு

உள்ளுறை

முன்னுரை

திறமை மிக்கவர், நேர்மையாளர், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று முழங்கிய நக்கீரர் போன்று அஞ்சா நெஞ்சம் படைத்தவர், உலைவின்றித் தாழாது உஞற்றியவர், அன்பின் உரு. இவரே என் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய அமரர் K. சம்பந்தம் பிள்ளை.

தஞ்சை மாவட்டத்தில் வேலங்குடி என்னும் சிற்றூரில் 1897ஆம் ஆண்டில் பிறந்த இவர் இளமையிலேயே கூர்த்த மதியும் நெஞ்சுரமும் பெற்றிருந்தார் என்பதற்குக் காட்டுமன்னார்கோயில் நாட்டார் முருகேசம் பிள்ளையின் கூற்று ஒன்றே சான்று பகரும் "யோக்கியன், கெட்டிக்காரன், ஆனால் முரட்டுப் பயல்" என்பது இவரைப்பற்றி அவருடைய மதிப்பீடு. கல்லூரியில் படிக்கும்போதே தமிழை ஆர்வத்தோடு பயின்றார். நல்ல தேர்ச்சியும் பெற்றார். இவர் எழுதிய பாடபுத்தகங்களையும் பிறநூல்களையும் படித்தவர்கள் இவருடைய பரந்த, ஆழ்ந்த தமிழ்ப் புலமையை அறிந்திருப்பார்கள்.

"நாவின் கிழத்தி உறைதலால் சேராளே, பூவின் கிழத்தி புலந்து" என்ற முதுமொழிக்கிணங்கத் திறமையும் புலமையும் இருந்தனவேயன்றி இவருக்குத் திருமகளின் அருள்நோக்குக் கிடைத்திலது. கல்வித் துறையும் இவருடைய தகுதியை நன்கு அறிந்திருந்தும் இவருக்கு உரிய பதவியை அளிக்கத் தவறிவிட்டது. தம் ஒரே மகள் (Dr. ஞானசுந்தரி) படித்து மருத்துவப் பட்டம் பெற இவர் பட்ட பாட்டை என்போன்றோர் நன்கு அறிவர். பொருள் தட்டுப்பாட்டால் பெரிதும் அல்லலுற்றார் எனினும் ஓய்வு பெற்ற பின்னரும் தளராத உறுதியுடன் கல்வித் தொண்டில் ஈடுபட்டு, சிறந்த பணியாற்றி வந்தார்.

தம் இறுதி நாட்களில் எழுதிய பூம்புகார்ப் பத்தினி என்னும் நூலை வெளியிடுமுன் கொடிய கூற்றுவன் இவர் உயிரைப் பறித்துச் சென்றுவிட்டான். இந்நூல் வெளி

திரு. சம்பந்தம் பிள்ளையவர்களின் குணநலன்களால் ஈர்க்கப்பட்டு அவரோடு நெருங்கிப் பழகிய திரு. அ. கனக சபாபதி அவர்கள் இந்நூலை அச்சிட்டு வெளியிட எடுத்துக்கொண்ட பெருமுயற்சி பாராட்டுக்குரியதாகும். இந் நூலாசிரியரின் அருமை மகளார் டாக்டர் ஞானசுந்தரி நடனம் அவர்கள் இந்நூலை வெளியிட அனுமதி தந்தமைக்குத் தமிழுலகு அன்னவர்க்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. நூலைச் சரிபார்த்து ஆங்காங்கே திருத்தங்கள் செய்த தமிழ்ப் பேராசிரியர் D. ஞானசுந்தரம் அவர்களும் திருத்தங்கள் செய்ததுமின்றி பிழைகளின்றிச் சீரிய முறையில் அச்சிட்டுதவிய B. C. லிங்கம் அவர்களும் பாராட்டுக்குரியவர்களே.

சி. வடிவேல்

பூம்புகார்ப் பத்தினி

தோற்றுவாய்

ஓங்கார ஒலிவடிவம் உள்மூல ஒலியாமால்
ஓங்கார வரிவடிவத் துதித்தெழுந்த பாரதமாம்.
இப்பா ரதத்தகத்தில் இருந்த விந்தப் பண்பதனால்
அப்பா லிருந்துவந்த அந்நியர், தம் ஆட்சியினை

நிறுத்தியே நம்மையெலாம் நையவைத்த நலிவையெலாம்
பொறுத்துமே பாரதத்தாய் பொருந்தமயம் பார்த்திருந்தாள்.
அக்காலை,
மேனாட்டுப் பெஸண்டம்மை கீழ்நாட்டுப் பண்பாட்டைத்
தானோக்கிப் பாரதத்தைத் தன்தேச மாய்க்கொண்டு

சுய ஆட்சி இயக்கத்தை எழுப்பினார் இந்நாட்டில்
பயம்விட்டுப் பலமக்கள் பலவிடத்து மெழுந்தனரே.
அதைத் தொடர்ந்து,
ஆப்பிரிக்க நம்மக்கள் அருந்துயரை யழித்தொழித்து,
ஆப்பிரிக்கா விட்டிங்கே வந்தடைந்தார் காந்திமகான்

அவராண்ட அகிம்சாவாம் அரியபடைக் கலன்பிடித்தே
ஆர்வமுடன் உரிமைப்போர் உருவாக்கி உவந்தெழுந்தார்.
முன்னாளைப் பண்பாக்கம் முதிர்ந்திட்ட மனத்தவராய்,
எண்ணிலா அருந்தவத்தோர் ஏற்றமது, அறிந்தவராய்,
இருபத்தே ழாண்டுகளாய் இடைவிடா தல்லலுற்ற
ஒருமனத்து நின்றவராய், உரிமைவெற்றி நாட்டிவிட்டார்;

தேசத்தின் தளைநீக்கித் தேசமக்கட் குரிமைதந்து,
மாசிலா வாழ்வதனில் வாழவே வழிதந்தார்.
தந்தையார் தந்திட்ட தன்னுரிமைத் தரவாழ்வைப்
பண்பாக வேபோற்றிப் பயன்காண வேண்டுமென்றால்,
நாட்டிலுள கலைப்பண்பாம் நல்லுரத்தைக் கண்டாய்ந்து,

நாட்டிலெழு இலக்கியங்கள் நுண்மதியின் இனிதாய்ந்து,
மாண்பான ஒழுக்கமெலாம் மனத்தின்கண ஒளிவிடவே,
மாண்பிலா ஒழுக்கமெல்லாம் மனத்தழித்த லுத்தமமாம்.
அதனால்.
தமிழகத்தார் தமிழ்நாட்டுத் தகுபண்பு தெரிந்திலங்க,

தமிழ்ச்சங்கக் காப்பியங்கள் தளிஐந்தின் கருத்தெல்லாம்
சீர்மைமிகச் சிந்தையினிற சிறந்து ம செறிந்திலங்க,
நேர்மையுடன் நாரியர்கள் நற்குடிமை நலங்கண்டு,
பொற்பொழுக்கம் போற்றுதற்குப் பூ புகார்ப் பத்தினியாம்
கற்பொழுக்கக் கண்ணகியின் கனநெறியைக் கடைப்பிடிக்க,

சீராரும் சாத்தனுடன் சேரல் இளங்கோவும்
சீர்த்தசொல் சித்திரித்த சிறந்தசிலப் பதிகாரக்
கதையறிந்து, கருத்துணர்ந்து, கற்புநெறி கைக்கொண்டு,
வகையறிந்த வாழ்வினிலே, வாழையடி வாழையென
வாழ்ந்து நீர் விளங்கிடவே, வளவாழ்வு மலர்ந்திடவே,

ஆழ்ந்து நீர் ஒழுக்கமதில் அன்புநெறி ஒன்றிடவே.
உற்றதுணை யாகிவிட உமையடையு மிந்நூலைக்
கற்றுநன்கு கருத்திருத்திக் கவின்பயனைக் காண்பீரே!

1. புகார் நகரம்

ஓமென்ற ஓரிசையும் ஓயாதே இசை பாட
சாமரைகள் வீசினவே தண்ணலையின் வெண்ணுரைகள்;
ஆளுயர மேலழும்பி அழுந்திப்பின் எழுந்தடித்த
ஆழாழி அலைகளெலாம் ஆர்ப்பரித்தங் காடினவே

சோழவள நாட்டினுக்குச் சோராத நல்லரணும்.
"எனக் கிந்தச் சிறப்பேனோ? எனக்கிந்தச் சாமரையேன்?
எனக்குரிய நாட்கடமை என்று போல் நான் புரிவேன்"
என்று சொலிக் கதிரோனு மெழுந்தானே கீழ்வானம்;
மன்றுஆ தனமதிலே மகிழ்ந்திருக்குந் தலைவரைப் போல்

"உனைவிட்டுப் பிரிந்தநான் உறங்கவில்லை இரவெல்லாம்
உன்னைக்கண் டிப்பொழுதே உவக்கின்றே னிதயமெலாம்.
இன்றைப் பகல்முழுது மெனைவிட்டுப பிரியாதே"
என்று சொலக் கீழ்கடலு, மிளங்கதிரோன் கூறிடுவான்:
"எழுகடலி லொருகடல்நீ என்றுநான் நன்கறிவேன்

வழுத்தியுமே நீ பேசி வஞ்சனைகள் நினைந்திடுவாய்"
இதுசொல்லிக் கதிரவனும எள்ளிநகை யாடிடவே
அதுபொறுக் குணக்கடலு மழுதுவிம்மிக் கேட்டதுவே
"வஞ்சனை நான் செய்ததென்ன? வகையாகச் சொல்லிவிடு
நெஞ்சிலே ஏறியதே நீசெய்த ஏளனமும்."

அதுகேட்ட பகலவனும் அமைதியுடன் புகலுகின்றான் ;
''முதியனான் எல்லவர்க்கும் முழுதறிவேன் வரலாற்றை ;
நீசெய்த வஞ்சனையை நினைத்தாலு மென்னெஞ்சம்
நீங்காத் துயரமதில் நின்று துடிக்கிறதே.
பழஞ்சரிதைத் தமிழகத்துப் பழந்தமிழர் தலையோங்கித்

தழைத்திருந்த திருநாடாம் தென்னாடு தொலைந்ததெங்கே?
குமரிமுனைக் கப்பாலே பெருநிலமாய்ப் பரந்திருந்த
குமரித்திருநாட்டில் குலத்தமிழர் வாழ்ந்தனரே ;
பெருங்குடித் தமிழரவர் பெருவீரத் தமிழரவர்
முருகுடைய தமிழரவர், பொருளுடைய தமிழரவர்,

அறநெறித் தமிழரவர் அன்பிலுறை தமிழரவர்,
பலகலைத் தமிழரவர், பண்புமிகு தமிழரவர்.
முதற்சங்கம் நிலைநாட்டி முத்தமிழை வளர்த்தவராம்
குறுநிலத்து மன்னர்களும் பெருநிலத்து மன்னர்களும்

அறமெங்கும் செழித்துவிட அருளாட்சி செலுத்தினரே.
மாரிவளஞ் சிறந்துவிட நாடுவளஞ் சிறந்ததுவே;
ஊரிலுள்ள மக்களெலா மொருகுறைவு மில்லாமல்
எங்கெங்குப் போனாலும் எங்கெங்குப் பார்த்தாலும்,
அங்கங்கு வாழ்ந்திருந்தார் அமைதிதரு வாழ்வினிலே,

பொங்கும் மதிநுட்பம் போற்றி வளர்த்திடவே
சங்கங்க ளிரண்டாலே தமிழுமிகத் தழைத்ததுவே,
செந்தமிழி லெழுந்தபல செழுங்கருத்து நூல்களையே
சிந்தையது செழித்திடவே தாங்கற்றார் செந்தமிழர்
அந்தோ!

அத்தனை சீருடனே, அத்தனை பேருடனே,
அத்தனை காலநின்ற அருங்குமரி நாடெங்கே?
பேருடனும் புகழுடனும் பெரியநிலப் பரப்புடனும்
பாரினிலே நிலைத்திருந்த பழஞ்சரிதை நாடெங்கே?

நீலக்கடலேநீ நிமிர்ந்ததலை ஏன் குனிந்தாய்?
ஓலமிடக் குமரிநிலம் உன்வயிற்றிற் கொண்டுவிட்டாய்
ஆறுகளும் மலைகளுமே அந்த உயிர் இனமும
ஊருகளும் சோலைகளும் உயர்தமிழ் நூலோலைகளும்
அழிவுண்டு போனதற்குன் அழிகுணமே பழியேற்கும் ;
'' பழியுற்றாய் பாவியுநீ ! பாதகனீ ! பாமரனீ !

இதுவேநீ விளைத்திட்ட வஞ்சகங் காண் " என்றங்கே
கதிரவனு முகஞ்சிவக்கக் கூறினன், மாகடலும்
" உத்தமனே ! உனக்குநான் உடன்பிறப்பு உறவலனோ?
சித்தமது கலங்காதே சினமென்பாற் கொள்ளாதே
தென்குமரி நாடதனைத் தேடமுடி யாதபடி

என் வெள்ளத் தாலழித்தே னுண்மைநா னேதுசெய்வேன் ?
ஊழ்வினையு மெதிர்த்திட்டா லொருவ ரங்கெதிர்ப்பதுண்டோ?
ஊழ்வினையு மூண்டுவிட ஒழிந்ததே தென்குமரி
பெருங்காலத் தமிழகத்தின் பெரும்பரப்புத் தரைமுழுதும்
ஒருங்காக அமிழ்ந்ததுவே ஒண்டமிழின் நூல்களுடன்

நானுமதற் கென்செய்வேன்? நீயுந்தா னென் செய்வாய்?
நானேதும் வஞ்சகமாய் நெஞ்சகத்தி லுணர்ந்ததிலே
அந்நாட்டழிவினுக்குப் பொன்னூர் தமிழ்நாடு
மீண்டும் பொலிந்திங்கே மேன்மை யுறத் தழைக்க
ஆண்டவனை வேண்டி அடிபணிந்து நிற்கின்றேன்.

பழம்பெருந் தமிழ்நாடு பாழடைந்த தருணமதில்
பழந்தமிழ் மக்களிலே பலர்வடக்கிற் புகுந்தடைந்து
மேல்கடலுங் கீழ்கடலும் வேங்கடமும் குமரிமுனை
நாலெல்லைப் புலந்தனிலே தோன்றிப் புதுநாட்டில்
இங்கவர்கள் குடியேறி எழில்வாழ்வு கண்டனரே.

செங்கோன்மை புனைந்தனரே சேரசோழ பாண்டியரும் ;
மூவேந்த ரவரானார் ; முதுநெறியி லவராண்டார் ;
பூவேந்த ராட்சிகளிற் பொன்போன்றத வராட்சி
மாதமும் மாரிபெய மலை, காடு, வயல், கழிகள்,
காதம் பல ஓடுங் காவிரியும் வையையுமே

பொருநைமுத லானபல பேராறு பாய்ந்தோட,
சேறுநிறை வயல்களெலாம் சொரிந்தனவே விளைவுகளை ;
பயிர்த்தொழி லால்பொருள்கள் பல குவிந்தனவே குறைவின்றி
கைத்தொழிலால் பொருள்கள்பல குவிந்தனவே குறைவின்றி
தம்நாட்டு வாணிபத்தைத் தாஞ் செய்த தமிழ்நாட்டார்

நன்னிதிய வளந்தேடி நல்வாழ்க்கை வாழ்ந்தனரே,
குடியோங்கிக் கோலோங்கக் கோலோங்கிக் குடிசெழிக்கப்
படிப்படியாய்த் தமிழ்நாட்டிற் பழம்பெருமை தலையெடுக்க
மதுரமொழித் தமிழணங்கும் மறுமலர்ச்சி தழைத்தனளே ;
மதுரையினிற் சேர்ந்ததுவே மாண்புறுமூன் றுஞ்சங்கம்.

இந்தத் தமிழ் நாடதுதான் இவ்வண்ணம் நலமுறவே!
எந்தனுடை உதவியுமீங் கில்லையோ உரைத்திடுவீர்!
செங்கிரணச் சூரியரே! சிந்தைகொண்டு சொல்லுமையா!
அங்குள்ள காவிரிப்பூம் பட்டினத்தைப் பாருமையா!

சோழவள நாட்டிலது சீர்மிகுந்த நகரமையா;
சோழநாட்டாரினுக்குச் செல்வந்தரு துறைமுகமாம்;
பொன்கொழிக்கும் காவிரியின் புகுமுகத்தின் கரையுளது.
என்கரைமீ தெங்கணுமே இதற்கிணையுங்கொன்றில்லை.
கரையோரங் கண்ணோட்டும்; கப்பல்பல காணுமையா!

கரைமீது காத்துள்ள கட்டைவண்டி மூட்டைகளே
வெளிநாட்டு ஏற்றுமதிக் கெனவந்து இறங்கியவை;
வெளிநாட்டு இறக்குமதி வகைப்பொருளுங் கிடப்பன காண்!
ஆயிரமாம் சணக்களவில் ஆட்களிங்குக் கூடுவரே,
தீவிரமா யேற்றுமதி இறக்குமதி செய்திடுவர்.

பொன்னிவளப் பூமிவிளை பொருள் மிகுந்த பொதிகளையே
எண்ணிமிகத் தலைநிமிர்ந்து எழுந்துகூத் தாடிடுவேன்—மற்றும்
பட்டினத்தின் பரப்பினிலே பார்வைகளைப் புகுத்திடுவீர்;
பட்டினத்துப் பாக்கமதோ பழமருவூர்ப் பாக்கமதோ!
நடுவில்நா ளங்காடி நறுமணங்க ளடுசோலை,

நடுப்பகலே எனினுமதில் நல்லொளியே எழுவதிலை.
பட்டினத்தின் வீதிகளைப் பார்த்திடுவீர் வரிசையிலே!
எட்டடுக்கு மாளிகைகள்! எழுந்து நிற்கு மாடங்கள்!
அரசகுலத் தவரங்கே அலுவலகத் தவரங்கே,
அரண்மனையின் வளைவங்கே அழகாக விளங்குது காண்!

ஐம்பெருங் குழுவினரும், எண்மரவைக் குழுவினரும்
தம்மரசர்க் கறிவுத்துந் தகுவாட்சிக் கூடங்காண்!
தமிழ்மொழியுந் தான்சிறக்கத் தமிழ்ப்பேச்சு அம்பலங்காண்!
தமிழோதித் தமிழ்பாடித் தமிழ்நடிக்கத் தமிழ்தந்தோர்,
மாந்தருடல் மருவுநோய் மாற்றுந் திறமருத்துவரும்,

சார்ந்தகிர கக்கதியைச் சோதிக்குஞ் சோதிடரும்,
எண்ணுபல கலைபயின்றோர் ஏடுகளாய் நின்றனரே.
மன்னுகலைத் தெளிபட்டி மன்றங்காண் தனியிடத்தே!
மேலுங்காண் !
நெடுநாளை நோய்ஒழிய நீர்மூழ்கும் பொய்கைமன்றம் !

நடுநீதி மாசுறின்,கண் ணீர்சொரியும் பாவைமன்றம் !
தெருக்களிடைத் தெரிபவைதாம் திருக்கோயில் மாளிகைகள்.
ஒருபுறத்தி லுள்ளதது உலகிறைவன் உறைவிடமாம் ;
உயர்மேட்டி லுற்றதுவே முருகபிரான் றன்கோயில் ;
அயலுள்ள கட்டிடமே பலதேவர் ஆலயமாம் ;

திருமாலின் திருக்கோயில் தெரியுதந்தத் தெருவினிலே.
அருகருக்கும் புத்தருக்கும் அழகான பள்ளிகள்தாம் ;
எச்சமயத் தார்வழியும் மெய்ப்பயனே தந்திடுமால்,
ஒத்தஉணர் வுத்தமராம் உயர்சோழ மன்னரவர்;
மற்றும் வளநகரின் மக்களுறை வீதிகள் காண் !

சுற்றிஅரண் மனைவளைவைச் சூழ்ந்தனவே மாடங்கள்.
பண்டகசாலைகளெல்லாம் பதிந்துள்ள வீதியதோ !
பண்டம்பல வாணிபஞ்செய் பெருப்பணத்து வணிகரவர்
ஏர் முகமும் தோல்கயிறும் இறைகூடைத் திண்ணைதனில்
தார்க்கம்புந் தொங்கவைப்பர் தம்நிலத்தில் தொழில் செய்வோர்.

பாவோட்டித் தறிபூட்டிப் பாங்குடனே தறியடித்துப்
பூவேலைத் துணிநெய்யும் பழந்தொழிலார் தெருவதுதான் !
சித்திரங்கள் சிறப்பாகச் சித்தரிக்குஞ் சைத்திரிகர்,
கைத்திறத்துச் சிலைவடிக்குங் கைதேர்ந்த சிற்பிகளும்,
பலநூறு சித்திரங்கள் பலநூறு சிலைகளுடன்,

தலங்கள்பல அழகுசெய்வார் அவர்வாழுந் தெருவதுதான்,
தச்சுக்கூடமங்கே தட்டுஉலைக் களமங்கே!
அச்சூற்று வெண்கலமும் ஆணிப்பொற் கொல்லரங்கே!
எள், கடலைத் தேங்காயை எண்ணெய்பிழி செக்கார்கள்
சொல்லரிய சத்தமிடைச் சுற்றுகின்றார் செக்கடியில்

மண்மிதித்து மட்கலங்கள் வனைகுயவர் வீதியதோ!
பண்பாடிப் பஞ்சுநூல் பட்டுநூல் இழைப்பார்காண்!
ஓசையெழும் அத்தெருவில் கருவியுடன் குரலெடுத்து
ஆசையுடன் பாடுகின்றார் அருங்கூத்து மாடுகின்றார் !
இன்னும்பல தொழிலாளர் இங்குமங்கும் தோன்றுகின்றார்!

அந்நியநாட் டார்சிலரும் அங்குமிங்குக் காண்கின்றார்!
கடைவீதி காண்கிறது கண்கொள்ளாக் காட்சியுடன் ;
கடைகளிலே பலபொருட்கள் குவிந்துள்ள பொலிவென்னே !
காவிரிப்பூம் பட்டினத்தின் கடைவீதி பார்ப்பதற்கே
பாய்விரிக்குங் கலமேறி வந்தடைவர் வெளிநாட்டார்.

பட்டினத்து வாழ்குடிகள் பசி பிணிகள் விட்டவராய்த்
தட்டின்றி யேவாழ்ந்து தமது மனமேகளித்தார்.
நாளங்கா டியினடுவே நாற்சதுர மேடையது
நாளெலாம் பலியேற்கும் நற்பூதச் சதுக்கங்காண்!
அஞ்சாமற் பஞ்சமா பாதகங்கள் புரிந்திடுவார்

நெஞ்சமே பதைபதைக்க நன்பூதம் வதைத்திடுமே;
அப்பூதம் அவ்விடம்விட் டகலாம லிருந்ததனால்
தப்பாமல் நெறிவாழ்வு தழுவி யக்கள் நின்றனரே,
மற்றுமாங் கெழுவதுமே முறைநீதி வழக்கறிஞர்
குற்றம்புரி வார்நிறுத்திக் குற்றங்களை ஆய்ந்து நன்கு,

ஒவ்வொருவர் குற்றந்தனை எழுமுறையுங் கேட்டறிந்து,
ஒவ்வொருவர் தமக்கேற்ற உயர்நீதி தருமன்றம்.
ஊரெல்லைப் புறந்தனிலே சூழ்காப்புப் பாசறைபார்!
பேர்போன சோழருடைப் படையங்கு வாழிடமாம்.
தேரினுச்சியிற் பறந்தாடும் பெருவெற்றிப் புலிக்கொடியும்

வீரியங்கொள் ஏறதுபோல் வீறுகொண்டு ஆடுதுபார்!
அண்டநிறைத் தடமெங்கும் அரியஒளி தருவோனே!
கண்டனையா பூம்புகார்ப் பட்டினத்தின் பெருமைதனை!
இத்தனை செழிப்பினுக்கும் இத்துணைச் சிறப்பினுக்கும்
இத்தனைப் புகழினுக்கும் இத்தனை உயர்வினுக்கும்

நான்செய்த உதவிதனை நீயறிவாய்! யாரறியார்?
ஏனெனைக் கோபித்தாய் " என்றுசொலக் கதிரவனும்,
" என்னருமைத் தண்கடலே தணித்திடுவா யுன்வருத்தம்;
உன்னுதவி இந்நாட்டிற் குற்றவகை உலகறியக்
கள்ளமனங் கொண்டுநான் கடல்நண்பா! குறைகூறி;

மெல்லஉன தருஞ்சினத்தை மூட்டினேன் " என்றதுவே.

2. கண்ணகியின் இளமையும் திருமணமும்

தமிழகத்து முன்னாட்டில் முன்னாட்டும் முதுநாடாம்,
தமிழரசர் செங்கோன்மை சிறந்திருந்த சோணாட்டில்
குலப்பெருமை கருத்திருத்திக் கோல்கொண்ட கரிகாலர்,
பலகுடிகள் நலங்காண நாட்டாட்சி நடத்தினர்காண்!
கரிகாலர் தலைநகரம் காவிரிப்பூம் பட்டினமே;

அரியதொரு மறுபெயரும் பூம்புகார்ப் பட்டினமே ;
அப்புகார்ப் பட்டினத்தார் அவ்வரசர் ஆட்சியிலே ;
எப்புறமும் வளங்கொழிக்க, இன்பமிக, வாழ்ந்தனரே ;
துன்பமது தோயாத தூயநல்ல சிந்தையுடன்,
நன்குமிக வளர்த்தனரே நாகரிக வாழ்வுதன்னை.

அப்பொழுது அந்நகரின் அணி வணிகர் வீதியிலே,
கைப்பிலாக் குடிமைநெறிப் பெருங்குடியர் குலமதிலே,
மாநாய்க்க வணிகரெனும் மாவணிகர் தன்தொழிலைச்
சோணாட்டி னூரெங்குஞ் சோர்விலா தினிதமைத்து,
எண்வகைய செல்வமெலா மியல்புடனே சேர்த்தங்குத்,

தன்தாரந் தன்னோக்கில் துணைநிற்கத், தனிமகளாம்
கட்டழகிக் கன்னியிளங் கருங்கண்ணிக் கண்ணகியாள்
மட்டற்ற மகிழ்ச்சிதர, மாண்புமிக வாழ்ந்தாரே,
கண்ணகியின் எழில்நலமுங், குணநலமு மேற்றமுற,
அன்னவளுக்கிணையீடிங்(கு), அவளேதா னுண்மையிலே.

சிறுவயது முதலாகச் சிரித்தமலர் முகமுடையாள் ;
சிறுவருடன் பெரியரிடஞ் சினமொழித்த சொல்லுடையாள் ;
தாயுடைய தனியன்பில் தோய்ந்திருந்த தன்மையினால்,
தாயருகு அகன்றெங்குந் தனித்துச்சென் றறியாளே.
புதியநகை, புத்தாடை தான்தரித்துத் தந்தையிடம்

அதிவேக மாயோடி, அவைகாட்டி மகிழ்ந்திடுவாள் ;
தந்தையார் பக்கமிருந் தின்னுணவு புசித்திடுவாள் ;
தந்தைதரும் பிடிச்சோறு தான்களிக்கப் பெற்றிடுவாள் ;
பிச்சையெனக் கேட்டவர்க்குப் பிடிப்பிடியாக் கொடுத்திடுவாள்;
உச்சிப்பொழு தாயினும் ஒருவருக்கு மில்லையென்னாள் ;

விருந்தினர்கள் வந்தவுடன், வாருங்க ளென்றழைத்து,
இருந்துண்ண வேண்டுமென்றே இன்மதலை மொழிந்திடுவாள் ;
"சீமானார் பெருவணிகர் செல்வமகள் தானெனினும்,
ஈதேதோ அதிசயந்தான் இப்பெண்ணி னருங்குணமே !"
என்றுபலர் மனமார வாயார வாழ்த்துங்கால்,

" நன்றீசன் பேரருளே !" எனநவில்வர் பெற்றோரும்.
தனிமகளுக் கொருதுணையாத் தேவந்தி யென்பாளைப்
பணிப்பெண்ணாய் மனைவைத்தார் பரிவுள்ள மாநாய்க்கர்,
கண்ணகிதன் நிழலெனவே, குணமுடைய தேவந்தி
தன்னயர்வு தானமறந்து தகுதோழி யானாளே.

அன்புபிணை இருபெண்ணும் ஆடியோ டிடக்கண்டோர்
பொன்னனைய கண்ணகியைப் போற்றியே களித்திடுவர்.
ஒருநாள்,
தேவந்தி பாத்திரத்தில் தோழிக்குப் பாலெடுத்துத்,
தேன்மதுரத் தெம்மாங்கு மெய்மறந்து பாடிவர,

கால்தவறி வீழ்ந்தாளே ; கண்ணகியும் விரைந்தாளே ;
பால்தரையிற் சிந்திவிடப், பாத்திரமுஞ் சிதைந்துவிட,
அரவங்கேட் டங்கடைந்த மாநாய்க்கர் மனையாளும்
அருமைமகள் பாத்திரத்தைப் பிடித்திருக்கப், பணிப்பெண்ணும்
வழிந்தோடும் பால்தனையே வகையாகப் பாத்திரத்தில்

வழித்தெடுக்கக் கண்டனளே; அன்னைகண்ட கண்ணகியும்,
“பால்பாத் திரத்தைநான் பாராமல் தவறவிட்டேன்
பால்தரையிற் சிந்தியது, பாத்திரமுஞ் சிதைந்ததம்மா!”
ஈதுசொலிப் பொருமியழத், தேவந்தி திகைத்து நின்றாள்.
“யாதுசெயத் தவறுதலுக்கு? அதற்குநீ தவிப்பதேன்?”

கூறியிது தாயுந்தான் தேவந்தி தனைநோக்கி,
“வேறுபா லெடுத்துவா வேறுபாத் திரத்தி”லெனக்
கண்ணகியின் நற்குணத்தைக் கண்டுணர்ந்த தேவந்தி
கண்ணகியென் உயிரலவா! என்றெண்ணி யகன்றாளே.
இவ்விதமே இவ்விருவ ரிடமெழுந்த நல்லுறவு
நல்விதமாய் செழித்ததனால். நட்புமிகச் சிறந்ததுவே.
அப்பொழுது,
கண்ணகியாள் வளங்கொண்டு கண்ணியமா வளர்ந்துவரப்
பன்னிரண்டாம் வயதடைந்தாள் பண்புமிகு மனத்துடனே.
ஈசனருள் மனம்பதித்த மாநாய்க்கர், மாலையிலே

ஈசனா லயமடைந்து இறைஞ்சுவா ரெந்நாளும் ;
பத்திமனம் பெருக்கெடுக்கப் பன்முறையும் பாடிடுவார் ;
சித்தமது குளிர்ந்திடவே, செயல்மறந்து கரங்குவிப்பார் ;
“சஞ்சலமெல் லாந்தீர்ப்பாய்! செல்வமகள் காத்தருள்வாய் !
தஞ்சநீ யெனக்”கெனவே தரைமீது படிந்திடுவார்.

இவ்வகையி னொருமாலை இறைவன்முன் னிறைஞ்சியவர்
அவ்வருமைக் கோயில்வலங் கொண்டுவரக் கருத்துடனே,
பின்னிருந் தொருவரவர் தோள்மீதுத் தட்டிவிடப்,
பின்திரும்பி வழிபார்த்து, “மாசாத்து வானன்றோ!
வருக!”வெனக் கைகூப்பி வளர்நகையுங் கொண்டுரைப்பார்;

"ஒருதெருவார், ஒருகுலத்தார், ஒருதொழிலாளர் ஆயினுநாம்
காணாமல் தனித்திருந்தே காலமிக்க கடத்திவிட்டோம்;
கோணவே உமதுமனம், கொடுமைநான் புரிந்ததுண்டோ?"
என்றிடவே மாநாய்க்கர், மாசாத்து வாருரைப்பார்;
"இன்றுதான் திரும்பிவந்தேன் ஏழுமா தங்கடந்தே.

வாணிபத்தின் நிமித்தத்தால் வளயவனர் நாடுசென்று,
வாணிபப் பொருள்விற்று,வாணிபப் பொருள் கொண்டு,
காசுக்கொரு காசாகக் கனலாபந் தானிரட்டித்,
தேசங்கள் தாண்டிவரத் திடுமெனவே ஒருபகலில்
கடும்புயலும் வீசிடவே, கருமேகம் வான்மூட,

நடுக்கடலில் வந்தகப்பல் நான்குமுறைச் சுழன்றாடி,
விரைந்தடித்த வடகாற்றில் வசமாக அகப்பட்டு,
நிறைந்தநுரை தலைநிற்க, எழுந்தமலை யலைபிளக்க,
அம்புபோற் பாய்ந்ததுவே தென்திசையைத் தானோக்கி;
எம்முடலி லுயிரில்லை, எல்லவரு முளந்துடித்தோம்.

மனைவிமக் களைநினைந்தோம், மனங்குழம்பிக் கூவிவிட்டோம்
'வினைவிளைவோ வேல்முருகா! வினையறுக்க லாகாதோ?
ஏழைகளுக் குற்றவழி ஏதேனுங் காட்டாயோ?
ஏழைகளைக் காத்திடுவா', யென்றுநான் கண்மூடிக்
கரங்குவித்து, மெய்மறந்து, கப்பல்பாய் மரத்தடியில்

குரல்நடுங்கி வேண்டியநான், உளமயங்கிச் சாய்ந்துவிட,
அவ்வேளை,
மாசாத்து வா! நீயும் மனநொந்து வாடியதேன்?
காசுக்கொரு காசுசேர்த் திட்டஉன் திறமெங்கே?
மனத்திலே கர்வமெழ, மனத்திலே கருணையற,

தனக்குநே ரில்லையெனத் தற்பெருமை நீகொண்டாய்;
அகங்காரத் தால்துன்பம் அண்டியது; துன்பத்தால்
அகங்காரஞ் சிதறியது; அகங்குழைந்து சரணடைந்தாய்;
நின்றுவிடும் ஊதுபுயல்; நன்றுநீ ஊரடைவாய்;
இன்றுமுதல் உள்ளளவும் ஈசனருள் மறவாதே!'

ஈதுசொலி ஆறுமுகத்தான், ஏறிமயில் மறைந்தானே!
'ஓதுமறை ஈசனையென் உள்ளத்தில் நாட்டிடுவேன்'
எனக்கூறி நினைவுபெற, எனைச்சூழ நின்றோர்கள்
'கனவேது கண்டீர்நீர் கரங்குவித்துக் குழைந்துரைக்க?
புயலோய்ந்து, மழையோய்ந்து, அயலெழுந்த அலையோய்ந்து,

நயக்காற்று நிலவிவிட, நமதுகப்பல் நிலைகொள்ள,
உமைத்தேடி இங்குவந்து, உறங்கக்கண் டயல்நின்றோம்;
இமைமூடி ஏதோநீர் இங்குரைத்த தென்ன?என
'அனைத்துமவன் அருளேகாண்! அவனின்றி அணுவுமில்லை;
அனைவருமே வணங்கிடுவோம்; அவனருளை வாழ்த்துவமே!'

என்றேன்யா; னவ்விதமே வணங்கினோ மப்பாலே.
அன்றுநின்ற ஆறும்நாள் அலைகடலைத் தான்தாண்டிக்,
காவிரிப்பூம் பட்டினத்தின் கரைவந்தோம் பத்திரமாய்
நோவுநொடி யின்றி;மா நாய்க்கரே இதுஉண்மை'',
என்றுரைக்க,

அதுகேட்ட மாநாய்க்கர் ''அனைத்துமே முருகனருள்!
அதுவன்றி நம்திறமென் றெதுவுமிலை, நலமுமிலை.
''மாசாத்து வாரேஎன் மனத்திலொரு கருத்துண்டு
ஈசனா ராலயத்தி லின்றுநான் எடுத்துரைப்பேன்;
உமது மகன் **கோவலனை** உளங்குளிரக் கண்டுள்ளேன்;

உமதுகுணம், உமதுதிறம், உமதுநயம், ஒருங்கமையப்
பெருங்குடியின் பெருமையினைப் பேணிமிகப் புகழடைவான்
நறுங்கொன்றை நலலீசன் நல்லருளா லென்றறிந்தேன்.
அவன்வயது பதினாறோ அதையெனக்குப் புகலு''மென,—
''அவன்வயது பதினாறே; அவன்றனக்கு மணமுடித்து,

கண்குளிரக் கண்டிடவே, ஆசையவன் தாயினுக்கு;
என்மனத்து மவ்வாசை யெழுந்துளது சிலநாளாய்
உமது மகள் கண்ணகியாள், உத்தமியாள், கட்டழகி
எமதுமனைக் கேற்றமரு மகளாவா ளெனநினைத்தேன்.
பெண்ணிலா எங்களுக்குப் பெண்ணாவா ளிச்செல்வி

கண்ணகியுங் கோவலனுங் கடிமணந்தான் கொண்டக்கால்.''
எனக்கூற; அவர்சொல்லைச் செவியேற்ற மாநாய்க்கர்
''மனம்விட்டுச் சொல்லிவிட்டீர்; மறுப்பேது சொல்வேனான்?
உம்மனமு மென்மனமு மொத்துவிட்ட ததனாலே,
சம்மதமே கொண்டிடுவர் கண்ணகியுங் கோவலனும்;

மேற்கொண்டு மணவினைக்கு முன்னெடுக்கு முயற்சியெலாம்
ஏற்றமுடன் நாமெடுத்து இவர்மணத்தை நடத்திடுவோம்,''
என்றுரைத்து மாநாய்க்கர் ஈசனடி தான்வணங்கித்
தன்மனையில் வந்தடைந்தார்; மாசாத்து வனும்பிரிந்தார்.
அதன்பிறகு,

மறுமாத மொருநாளில் மாலையாம் பொழுதினிலே,
நறுமலர்கள் நிறைந்த வனந்தனிலே சிறுகுளத்தின்
கரைமீது களித்திருந்த கண்ணகிக்கு மலர்சூட்டித்,
தலையாட்டிக், கையோட்டித் தேவந்தி குதித்தாடிக்,
"கண்ணாட்டிக் கண்ணகிக்குக் கலியாணம்! கலியாணம்!

கண்ணாரக் கோவலனார் கலியாணங் கண்டிடுவார்,"
எனக்கூவிக் கண்ணகியை மலர்ச்செண்டு கொண்டடிக்க,
மனவெட்கம் முகங்காட்ட மலர்ச்செண்டு தானெடுத்துத்,
தேவந்தி தனைத்துரத்த அவளோட, இவளோடத்,
தேவகன்னியரைப்போல் துள்ளிவிளை யாடினரே.

மணவிழா நெருங்க,
மகன்கலி யாணத்திலே மகிழ்ந்தமா சாத்துவனார்
பகலிரவு பாராமல் பேருக்கம் பற்றியராய்,
மணப்பொருட்கள் சேகரித்தார்; மணவோலை யெழுதிவிட்டார்,
மணத்தின்முனர் வருகவென, மணக்கூட்ட மழைத்துவிட்டார்.

திருமணத்தைத் தானடத்த மனமொத்த மாநாய்க்கர்
மருமகனுங் கோவலனை மனங்கொண்டு களிப்புற்றார்.
இம்மக்கள் திருமணம்போல் எம்மனையு மில்லையென,
நம்மூரார், நம்முறவார் நன்குணர வேண்டுமென,
ஆயிரம்பே ரமர்ந்திருக்க ஆயிரக்கால் பந்தலிட்டார்;

ஆயிரங்கண் போதாதே அதனழகைப் பார்த்துவிட.
மனைபுதுக்கி மெருகிட்டார்; மனையெங்கு மலங்கரித்தார்;
மனையின்முன் புறமெல்லாம் புதுமணலைப் பரப்பிவிட்டார்.
அரிசி,பருப் புழுந்துமுத லானஉண வுப்பொருளும்,
கறிவகைகட் குரியபொருள் காய்,பழங்கள், கிழங்குகளும்,

வந்துவந்து குவிந்தனவே, வகைவகையாய் பிரிந்தனவே;
எந்தவிடஞ் சென்றாலு மினியமணஞ் செறிந்ததுவே.
கண்ணகியின் கட்டழகைக் கண்ணியமாய்க் கூட்டிவிட
பொன்வெள்ளி யணிகளுடன் பொன்னுடை வந்ததுவே.
மணநாளில்,

மங்களவாத் தியங்களுமே மங்களமா யிசைத்திருக்க,
மங்களமாய்ப் பெண்களெல்லாம் மலர்சூடிப் புடைசூழ,
ஊராரும், நட்பினரும், உறவினரும் நிறைந்தங்கு
ஆர்கடலைப் போன்றவர்கள் ஆர்ப்பரிக்கப் பெருமகிழ்வால்,
நடுவிடத்தில் நிலைத்ததொரு நல்லமணி மணவறையே

ஈடுஎதி ரில்லாமல் எழில்வீசி விளங்கியதே ;
மணிவடங்க ளிடையிடையே மலர்ச்சரங்க ளொன்றிநிற்க
மணியிதுதான், மலரிதுதான், என்றுசொல இயலவில்லை ;
நற்பவழத் தாலான நாலுகால் தாங்கிநிற்க,
சொற்பயிலுங் கிளியுருவஞ் சிறந்துமே நின்றாட,

தலைப்புறத்து நான்குமயில் தோகைதனை விரித்துவிட,
அவையலகிற் சிறுநாகம் அகப்பட்டு அசைந்தாட,
மண்டபத்து மேலெங்கும் மஞ்சள்மலர் மூடிவிட,
தண்டமிழ்நாட் டியற்கையுரு தனிநிறங்கொள் மலர்காட்ட,
பொற்சிகர முச்சியிலே பொருந்திநின்ற அம்மேடை

சிற்சபையாச் சீர்மிகுந்து சுடர்விட்டுச் சிறந்ததுவே ;
மேடைநடு வேயமைந்த மணிப்பீட மதிலயர்ந்த
ஆடையணி கலனணிந்த கண்ணகியும் கோவலனும்,
நிறைமதியுங், கதிரவனும் நெருங்கியநற் காட்சியதாய்,
குறுநகைகொண் டுளமகிழ, அருகிருந்தா ருதவிசெய,

மங்கலவே ளையதனில், மங்கலஇன் னிசைமுழங்க,
மங்கலநா ணைப்பிடித்து, மனநிறைந்த கோவலனும்,
மங்கலநல் லாசியிடை மணமகளுக் களித்தனனே.
''மங்கலமே வளர்க!''வென வாழ்த்தியது மணக்கூட்டம் ;
''வாழியே கற்புடைய கருங்கண்ணிக் கண்ணகியும்,

வாழியே கோவலனும் வாழையடி வாழையென,
வாழியே மாநாய்கர் மாசாத்து வான்குடிகள்
வாழியே பெருங்குடியார் !'' என்றுவாழ்த் தினரங்கே.

3. கோவலன் மாதவியை யடைதல்

பூர்புகார்ப் பட்டினத்தின் புறத்துமேற் கெல்லையிலே
பூஞ்செடிகள், பூங்கொடிகள், பழமரங்கள் பலநிறைந்த,
தழைநெருக்கந் தண்ணிழலைத் தரையெங்குந் தான்பரப்பி,
மழைமுகிலை வான்கண்டு மயிலாடும் வனப்படைந்தும்
பெரும்பறவைச், சிறுகுருவி, புள்ளினங்கள் சிறகெடுத்துப்

பறந்தெங்கும் பாய்ந்தமர்ந்து, பாடிவாழ் சோலையொன்று
காவிரியின் கரையதிலே, காவிரியின் வளங்கொண்டு,
ஓவியக்கற் பனையழகு ஒருங்கமையப் பொலிந்ததுகாண்!
கோவலனின் தந்தைதனக் குரித்தான அச்சோலை
மேவினர்நங் கோவலனுங் கண்ணகியு மொருகாலை.

மணவிழாக் கண்ட கற்பின் மனையறத்தைக் கொண்டவர்கள்
தனிவாழ்வு கோலிடவே தனிவீட்டிற் குடியேறி,
புதுவாழ்க்கைக் குரியதுணைப் பொருள்பலவுங் குவிந்திருக்க,
மதுரவாழ் வினுக்கேற்ற மனைப்பணி யாட்களுடன்,
தனிவாழ்க்கை தாம்நடத்தித், தழைத்தமனத் தினராகி,

இனிமையா யொருபகலை இங்குகழித் திடவந்தார்.
சோலையின்,
நடுவிடத்து நன்கமைந்து நின்றசிறு வீட்டின்முன்
நெடுமுற்றம் நின்றவண்டி நானு வகைப்பொருளை
இறக்கிவிடப் பணியாளர் எடுத்துப் புறஞ்சென்று,

பரபரப்பாய்த் தொடங்கினரே பகலுணவு தான்செய்ய;
தேவந்தி யங்கிருந்து தகுந்தமுறை யாணையிட,
தேன்மொழியாள் கண்ணகியும், திருவாளன் கோவலனுஞ்,
சோலைதனிற் சுற்றிவரச், சீர்நடையாய்ச் சென்றனர்.
வேளைவெயில் ஆயிடினும் வெம்மையென்ப தங்கில்லை.

சுற்றிவரச் சென்றவர்கள் சோலையெங்குஞ் சிறந்திருந்த
புற்றரையின், பூஞ்செடியின், படர்கொடியின், பெருமரத்தின்
வளங்கொண்ட வடிவழகால் மனம்நிறைந்து மகிழ்ந்தார்கள்;
இளந்தளிரும், விரிமலரும், காய்கனியுங் கண்டார்கள் ;
மலரூதி மதுவருந்தும் வண்டினங்கள் கண்டார்கள் ;

பலபறவை கிளையமர்ந்து, பாடியதைக் கேட்டார்கள் ;
உயர்மரங்கள் ஒவ்வொன்றின் பெயர்சொல்லிக், கோவலனும்
உயர்குணமுங் கூறியங்குக் களிப்பித்தான் கண்ணகியை;
உல்லாச மாகஇவர் உலவிவந் தோரிடத்தில்,
கல்லாசன மொன்றிற் காலாற அமர்ந்துவிட,

கண்ணகியின் உச்சியிலே 'பொத்'தென்று ஒன்றுவிழக்,
கண்சலங்கிக் 'கோ'வென்று குதித்தெழவே, கோவலனுந்
திடுக்கிட்டுத் திரும்பிவிடத், தரைகுதித்த அணிற்பிள்ளை
நடுக்குற்றுப் பாய்ந்தோட, நகைத்துஅவன் வாய்விட்டு,
தலையுச்சி தடவிநின்ற தன்மனைவி தானோக்கிக்,

"கிளைவிட்டுக் கிளைதாண்டிக் கால்தவறி விழுந்ததது ;
இதனைநீ யறியாது அரன்றனையே!" என்றுசொல,
அதனுண்மை சிந்தித்த அவளுமுடன் சிரித்தாளே.
அச்சமயந் தேவந்தி அவர்களிருப் பிடம்வந்து,
"உச்சிப்பொழு தாயிற்று உணவருந்த லா"மெனவே,

"குளித்துவரு வோநாங்கள்", என்றுசொலி யிருவருமே
களித்துநீ ராடிவரக் காவிரிக்கு நடனந்தனரே.
கரையடைந்து,
கன்னியிளக் களைமுகத்தின் களிகன்னக் குழியதுபோற்
பொன்னிநீர் சுழற்சுழலாய்ப் பொங்கியே சுழித்துவர;

இருவருமே துறையிறங்கி, இனிதாகத் துளைந்தனரே;
அருகதனில் மிதந்துவந்த நுரைகலைத்து மகிழ்ந்தனரே;
தண்ணீரிற் புரண்டுவருந் தழைகளையப் புறந்தள்ளி,
மண்வளமு மணமூட்ட மனங்கவரு மாங்கனியை
எட்டியெடுத் திருவருமே எனக்குனக்கு எனச்சண்டை

இட்டிடுவர்; கைக்கனியைத் தட்டிவிட்டுக் களித்திடுவர்;
இங்ஙனமாய்க் காவிரியி லிவரிருக்கக், 'கீரிச்'சென்று,
அங்குஒரு குரல்கேட்க அப்பக்கங் கரைபார்க்க,
கைப்பலாச் சுளைபிடித்த குரங்குக்குட் டியைத்துரத்தி,
வைத்தசதைக் குரங்கொன்று விரைந்துவரக் குட்டியுமே,

வாய்ந்ததுறை வந்து,கோ வலன்தோளில் வாலெடுத்துப்
பாய்ந்ததே; கோவலனும் பயந்துநீர்க் குள்மூழ்கக்,
குட்டியுமக் கணந்தனிலே குரலெடுத்துக் கத்தியதே;
கிட்டியதைக் கண்ணகியுங் கைநீட்டிக் கால்பிடித்து,
அன்புடனே தூக்கியதை. யணைத்துமே தடவிவிட,

அன்புணர்ந்த இளங்குட்டி நன்றியுட னிவள்நோக்க,
"கண்ணகிநீ விட்டுவிடு, கடித்துவிடும் வால்குரங்கு,
தண்ணீரில் வீசு"எனத் தான்கோ வலன்கூற,
"அருஞ்சீவன் போய்விடுமே, அதைவிடமாட் டே"னென்று,
குறுகுறுத்த கண்ணுடைய குட்டியதைக் கரம்பிடித்து,

"எனையடைந்த இச்சீவன் என்வளர்ப்பே இன்றுமுதல்!"
எனக்கூறிக், குட்டியுடன் ஏறினள்காண் கரைமீதே.
கணவனுங் கோவலனுந் துணிபிழிந்து தலைதுடைத்துக்
கணநேரந் தன்னிலவன் கரையேறத் துறைநீங்கி,
இருவருமே விரைந்திட்டா ரெதிர்நின்ற வீட்டினுக்கு;

இருகணத்தி லாங்கடைந்து ஈரத்துணி மாற்றிவிட்டார்.
காத்திருந்த தேவந்தி குதித்தோடி இலைபோட்டுக்,
கைத்திறமாய்க் கறிவரிசைக் கண்கவரப் படைத்திட்டுச்
சீரகச்சம் பாச்சோற்றைச் சிற்றுவி பறந்திடவே,
நேர்நின்று படைத்தனளே நெகிழுமுளப் பண்புடனே.

சோறு, கறிக் குழம்புமணம் சேர்ந்துபசிக் கிளறிவிடக்
கோவலனுங் கண்ணகியும் பசிதீரப் புசித்தனரே,
உண்டெழுந்து களைதீர உறங்கினன் கோவலனும்;
"உண்டிடுநீ தேவந்தி!" என்றுரைத்துக் கண்ணகியும்,
அகமகிழ்ந்து, அருகிருந்து, அன்றுபகல் சோலையிலே

நிகழ்ந்தவைகள் தானுரைத்தாள் தேவந்தி நன்கறிய.
பொழுதுசாய,
சோலைதனிற் பகல்பொழுதைச் சொகுசாகப் போக்கிவிட்டு,
மாலையிலே மனையாளைத் தேவந்தி துணைகூட்டி,
மனையனுப்பிக் கோவலனும் வினைவசமாய்க் கால்நடையாய்,

வணிகத்தின் நிமித்தமதாய் வேறுவழி நடந்தானே.
அந்தஅலுவலை முடித்து, அந்தியான வேளையிலே,
சொந்தமனை தனைநாடிச் சிந்தையெழுந் தொருதெருவில்
வந்துகொண் டிருக்கையிலே, அங்கொரு கிழவிநின்று,
"அந்தமிகு இம்மாலை ஆயிரத்து எட்டுப்பொன்னே

மதிப்பினதாம்; விலைதந்து மாலைதனை வாங்கிடுவோர்
மதிமுகத்தாள் மாதவியாள் கலைநடனக் கணிகைக்கே
மணவாள ராகியவர் மகிமையுறு வா"ரெனவே,
கணப்பொழுதிற் கோவலனுங் கிழவியிடங் கடுகிப்போய்,
"மாலைவர லாறென்ன மதிப்பே றியதென்ன?

மாலையதன் மலர்கள்தான் பொன்,மணிகள் பொதிந்துளவோ?"
என்றுநகைத் தவளிடமே ஏளனமாய்ப் பேசிவிட,
நின்றஅந்த முதியவளும் "நகைத்திடேல் மகனேநீ
நம்மரசர் அவைதனிலே நாட்டியத்தை அரங்கேற்றி,
இம்மாலை மாதவியும் இனிதடைந்தாள் மன்னனிடம்;

மனமுனக்கு இல்லையெனின், மதியுடனே ஏகிவிடு;
மனம்வைத்து விலையளிப்பார் மாதவியை வென்றிடுவார்",
என்றுறுதி கூறஅவள், கோவலனுங் கலங்கிநிலை,
"நன்றுநான் பொன்தருவேன் நறுமாலை பெற்றிடுவேன்"
எனக்கூறக், கிழவியுந்தான் ஏத்தினளாய்க் கோவலனை,

மனநிறைந்து களித்திட்டாள், மாலையவன் கரத்தளித்தாள்.
கோவலனு மதையணிந்து, கிழவிமுன் னேநடக்க,
ஆவலுடன் பின்சென்று, மாதவியாள் மனைபுகுந்தான்.
வணிகர்மகன் கோவலனும் வண்மாலை கொண்டவிதம்
அணியிழையாள் மாதவிக்கு அக்கிழவி மொழிந்துவிட,

குணவதியா மாதவியுங் கோவலனின் மருங்கடைந்து,
மனநெகிழ வணங்கி,யவள் மணவாளன் வலம்வந்து,
''அன்பரீர்! ஏற்றருளு மடியாளை'' யெனக்கூற,
அன்புணர்ச்சி கிளர்ந்துவிட, அறிவிழந்த கோவலனும்,
முறைமனைவிக் கண்ணகியை மறந்தவனு மதிதிரிந்து,

மறநெறியின், மாதவியை மனந்தனிலே மிகக்கொண்டு,
''என்றென்று முனைப்பிரியேன்'' என்றியம்பி யுளமயங்கி,
அன்றுமுதல் அவள்மனைவிட் டகலாம லிருந்தானே.
அங்ஙனமாக,
சோலைவிட்டு மனையடைந்த கோல்வளைக்கண் ணகியாளும்

காலைமுதல் அன்றுபகல் மாலைவரை யனுபவங்கள்
எதிர்ப்பட்டோ ரிடமெல்லாம் எண்முறையு மியம்பினளே;
கதிரோனு மறைந்தானே கடன்முடித்து மலைவாயில்,
தனிச்சென்ற தன்கணவர் கால்நடையாற் களைப்புற்று,
மனைநாடி வந்திடுவார் மனமயர்ந்து வருந்தியென்று,

உணவுவகை யாக்கிவிடக் கூறி,வழி நோக்கியவள்
கணவனது பொன்வரவைக் கண்கூர்ந்து பார்த்திருந்தாள்.
''பகல்கழிந்து வெகுநேரம் பார்த்துமவர் வரவில்லை;
சுகமுடனே சென்றவர்க்குச் சூதேது சூழ்ந்ததுவோ!
நெஞ்சந் திடுக்கிடுதே! நிலைகொள்ள மறுத்திடுதே!

வஞ்சனையா யெவரேனும் வழிமடக்கி வதைத்தனரோ?
என்செய்வே னானேழை ஏதுமே நானறியேன்!''
என்றுள்ளங் கலங்கினாள்; ஏங்கினாள் கற்பரசி.
அப்பொழுது தேவந்தி அங்கவளைத் தேடிவந்து,
''இப்பொழுது இங்குவரரார் ஏங்கிடே'' லெனச்சொல்லி

நடிகையவள் மாதவின் மனைபுகுந்த நிகழ்ச்சிகளை
நொடிப்பொழுதி னவின்றவளும், ''நெறிகூறு நீதியிதோ!
மனைவியையு, மனைவினையு மறந்துநன் மதிவிட்டு,
மனம்போன வாறேகல் முறையோஇவ் வாடவர்க்கு?''
இதுகூறி முடிக்குமுனே, ஏந்திழையாள் முகங்கடுத்து.

அதுதவறு தேவந்தி! ஆத்திர நீ தோய்ந்துள்ளாய்!
உண்மைநிலை எதுவென்று புரியவில்லை யேன்பதட்டம்?
பெண்மைநிலை மறந்துதமிழ்ப் பெண்மைநெறி துறந்திடுதல்,
தமிழினத்தார்க் கிழுக்காகுந், தமிழகத்தார்க் கிழுக்காகுந்,
தமிழர்முறை தெரிந்தஅவர் தவறிழைக்கத் துணிந்துவிடார்;

அவர்தவறு செய்திருப்பின் அவர்வினையாற் சூழ்ந்ததென,
அவரிடமா யெழுந்தபற் றகலவிடே'' னென்றனளே.
அவ்வேளை மாநாய்க்கர் மாசாத்து வாருடனே
''இவ்வளவும் வன்னெஞ்ச ரிழைத்திட்ட வஞ்சனையே!''
எனக்கூறி, யங்குவந் தெழில்மகளி னருகடைந்து,

''கனக்கவலை கொள்ளாதே, கண்ணகியே! கேட்டிடுவாய்;
கூத்துகந்த கோவலனார் கலைப்பற்றுக் காரணமாய்க்
கூத்துக்கலை மாதவியின் கொடுமைசேர்ந் தா''ரெனவே;
மாசாத்து வாருமிக மனநொந்து, வாய்விட்டுக்,
''கூசாமற் குலப்பெருமை கொன்றனனே கோவலனுச்;

மடக்கொடியிம் மடந்தையாள் மனமுறித்தான் மாபாவி;
விடமனையான் பெண்ணிவட்கு வஞ்சனையே புரிந்திட்டான்;
மதியிழந்து, நெறிமறந்து, மனை,மனைவி நீங்கியவன்
சதிசெய்யும் நடிகையினைச் சார்ந்துமே நிலையிழந்தான்;
இனியவனை மகனென்று ஏற்றிருக்க முறையில்லை;

இனியுமவன் தமிழனெனத் தலைதூக்கத் தருணமில்லை'',
எனச்சினந்த மாமனிட மேங்கிநின்ற மயிலனையாள்,
மனந்தளர்ந்த மங்கையவள் வந்தருகு வணங்கியுடன்,
''எங்கள்பிழை பொறுத்திடுங்கள்! நாங்களிளம் பருவத்தார்,
உங்கள்மனங் கொதித்திடவே உதாசீனங்கள் கூறுவதோ?

உத்தமனார் தந்தைமிக உத்தமனார் தானலரோ?
சித்தமதுங் கலங்கிவிடச் சினமதுவு மோங்கிவிட
வசைமொழியும் புகன்றுவிடின் வகையுடனே பலித்துவிடும்;
இசைவுற்ற என்வாழ்க்கை இயல்புகெட் டேயழியும்;
இன்றுசென்ற அவரென்று மங்குநின் றிடுவாரோ?

ஒன்றிரண்டு திங்களிலே உற்றவிடந் திரும்பாரோ?
இப்பிரிவு பொறுத்திருத்த லென்கடனே பிழையில்லை;
இப்பிரிவு தாங்கிநிற்றல் தமிழணங்கின் தகுகுணமே''
என்றுசொல, மாநாய்க்கர் மாசாத்து வார்வியந்து,
''மன்றுளான் பேரருளிம் மக்கள்பால் பாய்க!''எனச்

சித்தமுழு வமைதியுடன் சிறந்தநல் லாசிதனைத்
தத்தமது நெஞ்சாரத் தந்துமவர் நீங்கினரே.
தாயடைந்த கண்ணகியைத் தேவந்தி தானடைந்து,
''சோர்வடைந்து காண்கின்றாய், சிறிதுணவு கொள்''ளென்றாள்;
''உணவளிக்க உடனிருப்பேன் உண்ணவா'' என்றழைத்தாள்

மனமுறிந்த மங்கையவள் "மன்னிப்பாய் என்னன்பே!
தற்காத்துத் தற்கொண்டார்ப் பேணியே தகைசான்ற
சொற்காத்த லென்றனது சோர்விலாக் கடனன்றோ?
மாலையிட்ட மணவாளர் மனையகன்ற ராதலினால்,
மாலைப்பொழு தாகிவிடின் மறுஉணவு அருந்தேனான்;

பகற்பொழு தொருபொழுதே புசித்துநான் தவமிருப்பேன்,
தகவுமிகச் செறிமன்னர் திரும்பிமனை சேரும்வரை",
எனக்கூறிக் கற்பரசி, எவர்மொழியுங் கேளாமல்,
மனஏக்கம் முகங்காட்டத், தன்னறைக்குத் தான்சென்றாள்.

4. கோவலன் மாதவியர் வாழ்க்கை

ஊழ்வினையு வந்தடைந்து உந்திவிட்ட விளைவாலே,
ஆழ்கடல்செல் வாணிபத்தில் அரியபெரு வளங்கண்ட
மாசாத்து வான்வணிகர் மகன்கோ வலனங்கு
மாதவியின் மனையிருந்து மாதவிதன் மனத்திருக்கத்,
தன்மனையை மறதிகொள்ள, தன்தந்தை மறதிகொள்ள,

தன்மனையின் தலைவியாம் தனிமகளைத் தான்விட்டுப்
பூம்புகார்ப் பட்டினத்தைப் பொலிவுசெய் பெண்குலத்த
தேம்மொழியர் கணிகையர்கள் திறம்படவே குடிவாழ்ந்த
தெருவிலை வலவரிசைத் திகழ்ந்துநின்ற வீடதனில்
மறுவிலா மாளிகையா மனங்கவரு மனையதிலே,

மகிழ்ச்சியே நிறைந்திருக்க, மனமங்கு நிலைகொள்ள,
நெகிழ்வுற்ற நெஞ்சமதில் நன்குணர்வு நிலவிவிட,
மலர்வல்லி மாதவியாள் மதிவதன மிளிரழகை
அலர்மலரை அங்கைவைத் தழகுமணம் பருகலைப்போல்,
அவன்கண்டு மயக்கமுற் றவளிடத்து மனம்விட்டு,

அவள்மனையி லவனுந்தா னகலாது வாழ்ந்தானே.
கட்டழகன் கோவலனைக் கணவனாய்த் தான்போற்றி
மொட்டவிழு மலரனையாள் மாதவியாள் மனத்தகத்துக்
கோவலனைத் தெய்வமாய்க் கொண்டுகளித் திருந்தாளே.
காளையர்கோன், கலையுணர்வோன், கனவணிக மன்னரிவர்

என்னுள்ளங் கவர்ந்திட்ட கள்வரென்தன் கணவரிவர்
என்றவளு மெக்களித்தா ளிறுமாந் திருந்தாளே.
தன்தலைவர் மனப்போக்கில் தானின்று மகிழ்ந்திடுவாள்;
தன்னலத்தைத் தான்மறந்து, தலைவர்நலந் தானினைவாள்;
கோவலனின் குறிப்புணர்ந்து, கோட்டமற்ற மனத்தோடு

ஆவலுடன் விரைந்தோடி, அவனுடலை வளப்படுத்த
நல்லுணவு, நற்பானம், நல்லுறக்கம், நன்மொழியால்
எள்ளளவும் மனநோகா தினியநல்ல முகங்காண,
ஆவனஎல் லாஞ்செய்வாள்; அவனிடத்து அன்புகொண்டு,
ஏவல்பல புரிந்திடுவாள் இழிவெதுவும் பாராமல்.

அவன்மனத்துக் கசப்பெழுந்து அவன்முகமுங் காட்டிடுமேல்,
அவன்விரும்பு மிசைபாடி, யவன்ரசிக்கும் யாழிசைப்பாள்;
இவ்வண்ண மிருவருமே ஈருடலு மோருயிராய்,
எவ்வண்ணத் தாலுமங்கு இணங்கிவாழ்ந் திருந்தனரே.
கண்ணகியோ,

"மணமுடித்த நாயகரும் மாதவிபால் நீங்கியது
மணவாளர் பிழையில்லை; மனமறிந்து செய்ததில்லை;
என்பழைய வினைதானும் எதிர்த்திடவே வசமாக,
என்மனத்தை முறிக்கஅவர் தன்மனத்தை மாற்றியது;
காலஞ்செய் கூத்திதுவே, காரணமு வேறில்லை;

காலமே கூடிவிடின், காரியமுங் கூடிவிடும்;
மாதவிதன் மனைதுறந்து, மறுபடியும் மனமாறி,
நாதரெந்தன் மனைதனையே, நாடியே வந்திடுவார்;
மனையினுக்கு மறுபடியும் மனங்கொண்டு வருமளவும்,
மனங்கொண்டு வந்தவரும் மனைவாழ்வு பெறுமளவும்,

நினைவவர்பால் நிறுத்தி, நான் நல்லுணவு, நற்பானம்,
கனவிலா நல்லுறக்கம் கழித்துமே நானிருப்பேன்;
மங்கள அணியின்றி, மற்றெந்த அணிதரியேன்;
மங்கள முகமாக்கும் மணத்திலகம் மறந்திடுவேன்;
மிகப்பரந்த விழிகள்புறம் மைதீட்டி வீட்டுவிடேன்;

முகிலனைய கூந்தல்முடி மணமலரைக் கூட்டிவிடேன்;
இந்நோன்பை நோற்றிடுவேன், எட்டுணையு நான்பிழையேன்;
என்வினையு முடிந்துவிடின், என்துன்பம் முடிந்துவிடும்";
என்றவளும் நினைந்திட்டாள்; நினைத்தபடி நின்றிட்டாள்,
மன்றாடும் மாப்பெருமாள் மறுவிலருள் மனநாட்டி.

அப்பொழுது,
காவிரிப்பூம் பட்டினத்திற் கோல்பிடித்த பெருமன்னன்
பாவிற்புகழ் பாடினர்க்குப் பரிசளிக்கும் பெருமன்னன்,
பழையமுறை பற்றியங்குப் பழந்தமிழர் போற்றிவந்த
மழைவளத்தை மக்கள்பெற மாவிழா மனந்தனிலே

இனிதேற்று, இந்திரனுக் கிசைந்தவிழா எடுக்களெண்ணி,
ஐவருள்ள குழுவினரை, ஆயத்தா ரெண்மரையும்,
வையம்புகழ் வளஅறிவர், வன்கணக்கர் தான்கூட்டி
நாளாய்ந்து, பொழுதாய்ந்து, நற்பழக்க முறையாய்ந்து,
நீள்விழா நிகழ்த்திடவு நினைத்தானே உறுதியுடன்

நினைந்தவனும் நகரவாழ் மக்களுக்கு முடிபதனை
மனைகள்நிறை வீதிகளில் முரசறைய ஆணையிட்டான்.
அரசரது ஆணைபெற்ற முரசடிப்பான் யானையின்மேல்
முரசேற்றி, முதுகமர்ந்து, வீதிவழி வந்தானே:
“அரசரது ஆட்சியென்று மமைதியுட னேவாழி!

குறைவின்றிக் குலந்தழைத்துக் குடிமக்காள் நீர்வாழி!
அரனாரின் அருள்துணையா லாண்டிலுள நாளெல்லாம்
அறத்துன்பம், எழஇன்பம், இந்திரனாந் தேவனையே
வழிபட்டுக் கடனாற்றி விழாச்செய்து களியுங்கள்;
பழிவிட்டுப் பட்டினத்திற் பெருவிழாப் போற்றுங்கள்;

கண்இனிய காட்சியெங்குங் கண்டிடவே செய்யுங்கள்;
மண்வளருந் தென்னை, பனைத்தோரணங்கள் தூக்குங்கள்;
குத்துவிளக் கேற்றிவைத்துக், கும்பம்,பா லிகைவைத்து.
முத்துசேர் மாலைகளைத் திண்ணைநிற்குந் தூண்மாட்டி,
மாப்பொடிக் கோலமிட்டு, மேற்கூரை கொடியேற்றி,

மேம்படுத்தி, மனைமுன்னும், மற்றவிடம் முழுதெங்கும்
புல்செதுக்கித் தரைபுதுக்கிப், புதுமணலைத் தூவிடுங்கள்;
கோயில்களு மவ்விதமே கண்கவரு மழகுபெற,
கோயில்நிலைத் தெய்வங்களைக் குணமாகத் துதியுங்கள்,
சிறப்போடு பூசனைகள் செய்தினிய பண்பாடி,

அருநிழலின் அம்பலத்து அறிவுரைகள் ஆற்றுங்கள;
சமைய நூல் ஆய்ந்தறிந்தோர் சமயஉரை ஆற்றுங்கள்;
அமையங்குறி வழியெல்லாம் அழகுவிழா ஆக்குங்கள்;
இந்திரனு மனங்களித்து இன்பமெலா மருளிடுவான்”.
இந்தவித மறிவித்தான் முரசறைவோன் மக்களுக்கே.

விழாநாளில்
பட்டினத்தி னிடமெங்கும் புதியஒளி வீசியதே,
மட்டிலாக் களைகொண்டு, மனநிறைந்து கலந்ததுவே;
எட்டியடி வைத்தவிட மெங்குநிறை வைபமே.
பட்டினத்து மக்களுடன், பக்கஊர் மக்களுடன்,

பிறநாட்டு மக்களுமே பட்டினத்தில் மண்டினரே.
புறஎல்லைத் தடங்களிலும் புல்பரந்த தலங்களிலும்,
அறநிலைய இடங்களிலும், இறைகோயில் இடங்களிலும்,
அருஞ்செடிகள், கொடிப்பந்தல், அடர்மரங்கள் சோலையிலும்,
காவிரியின் கரைகளிலுங், குளங்கள்பல கரைகளிலும்,

பாய்விரித்தா லெனமக்கள் பரந்திருந்தா ரெவ்விடத்தும்
ஊர்சுற்றி வந்த அவர் உளஎழுச்சி வாய்ந்தவராய்,
ஊரழகுந், தெருவழகு முற்றகடைத் திரளழகுங்,
காவிரிநற் கரையழகுங், கடலோரக் கரையழகும்.
வாவிநிறை நீரழகும், வனங்கள்தரு வளமழகும்,

அம்பலத்தின் கூட்டங்கள், அறிவுமன்றக் கூட்டங்கள்,
அண்மைநின்ற கோயில்களின் கூட்டங்கள் நிறையழகும்,
ஆங்காங்குப் போய்நிற்பார் ஆநந்தப் பேச்சழகும்,
ஈங்கிவர்கள் பலபடவே இனிதாகப் பேசினரே.
இந்நகருக் குள்ளிருந்த இந்திரனார் கோயிலிலே

பன்னாட்டுச் சனங்களுந்தான் புகுந்திடமஞ் சனங்காண,
எள்ளிட்டா லெள்வீழா எண்ணிறந்த ஆண்பெண்கள்
உள்ளிடத்தும் வெளியிடத்து மொருங்கிருந்து வழியடைக்க,
மூச்சதுவுந் திணறிவிடப், பேச்சொலியுந் திரண்டெழவே,
கீச்சொலிசெய் குழந்தைகளுங் குதித்தோடி விளையாட,

பறையொலியு, முழவொலியு பாட்டொலியு மயங்கியெழ,
தரைமீது தானசைந்து, துதிக்கைதனைத் தானாட்டிக்,
காவிரிநீர்க் குடந்தாங்கிப் பெருயானை போந்தங்குக்,
கோவிலின்முன் நின்றதுமே, குடமிறக்கி உட்சென்று,
இந்திரனார் சிலைதனையே இனியமுறை நீராட்டி,

சிந்தைநிறை பூசனையைச் செய்திட்டார் பூசாரி;
ஆயிரங்கள் கணக்கானோர் அதையூன்றிக் கண்டார்கள்.
ஆயிரங்கண் இந்திரனார் அழகுகண் டின்புற்றார்
நகரிலுள்ள மக்களெலா நாள்முழுது மங்குவந்து,
அகநெகிழத் தரிசித்து அகன்றார்கள் தனித்தனியாய்

பட்டினத்தின் அரங்குகளிற் பண்ணிசையும் யாழிசையும்,
மட்டிலா திசைத்தனவே, மக்களுந் திளைத்தனரே
நாடகநற் கணிகையரும் நாடகத்தின் கலைநுணுக்கம்
பாடின்றி நடித்தனரே, பாட்டுஞ்சேர் நடிப்புடனே;
கணிகைக்குல மாதவியுங் கணக்குப்படி முறைநாளில்,

கணிதமுறை பிழையாமற், கலைத்திறமை குறையாமல்,
கூத்தபிரான் கூத்துக்கெதிர் கூத்துத்தந்த சக்தியவள்
காத்தமுறை யோவென்னக் குரல்பாட்டுக் காடினளே.
அவள்கூத்தைக் கண்டவர்கள் ஆனந்தங் கொண்டுமிக
அவளாட்டம் மாதிரியே அகமயங்கி யாடினரே.

அங்கிருந்த கோவலனும் அக்கூத்தின் கலையழகை
அறிந்துணர்ந்து புளகித்தான் அவள்திறத்தைப் புகழ்ந்திட்டான்
இறுதியில்லை.
விழாக்கண் டுய்ந்துவிட வந்திருந்தோ ருளங்களித்து
விழாப்பட் டினத்தோரம் வீழலைகள் நிறைந்தொலிக்குங்

கடலடைந்து, அலைமிதந்து, அலைநீங்கி அலைமூழ்கிக்,
கடலாடித் துளைந்தாடிக் கடல்விழாத் தாங்கண்டார்,
அக்காட்சி தனைக்காண, அக்கூட்டந் தனைக்காண,
அக்கடலின் கரைதனிலே அழகியமேற் கட்டியுடன்
நாற்புறத்துஞ் சித்திரங்கள் நன்கமைந்த சிலைநிற்க,

நாற்காற் கட்டிலையே நாட்டியே கண்ணியமாய்க்
கடற்காட்சி கண்டிடவே கிளம்பினான் கோவலனும்;
மடக்கொடியாம் மாதவிதன் மணவாளன் பின்சென்றாள்.
சென்றவர்கள் இருவருமே சிரித்தமுகத் துடனமர்ந்து,
மன்றல்வினை மணவறையின் மணமக்கள் போலிருந்தார்.

கரையடைந்த குமரர்களுங், குமரிகளுங், குழந்தைகளுந்,
தரைமணலில் தங்கியங்குத் தண்காற்றுத் தம்மீது
வீசிடவே, மணற்கிளறி விளையாடி மனமகிழ்ந்தார்;
நாசிதனில் நற்காற்று நன்றேறச் சுகங்கண்டார்
கடல்நீரில் தாமாடிக் கரையேறித் தலைதுடைத்தும்

கடலை, பொரி, சுண்டல்வகை கனிவகைகள் உண்டுமவர்,
உற்சாக மாகஅவர் உவந்திருந்த மாட்சியினை,
நற்கட்டில் மீதிருந்தோர் நற்காட்சி யாக்கண்டார்.
அப்பால்,
இசைபாடி இனிமைபெற எண்ணினரவ் விருவருமே;

வசைபடாக் கோவலனும் வரியாழைக் கையெடுத்து,
நரம்புகளை நல்லிசைக்கு நன்கிழுத்து நிறுத்திவைத்து,
தரமான இன்னொலியைத் தாமெழுப்பி, இசைநிலவக்,
கானல்வரிப் பாக்களையுங் குணயாழிற் பாடிடவே,
ஆனஅகத் துறைகள்சில அப்பாக்கள் தெரிவிக்க,

செவியுற்ற மாதவியுஞ் "சீலந்தான் மாறிவிட்டான்
தெவிட்டியது போலு மெந்தன் தனியன்புப் பாசமுமே!"
என்றெண்ணி, யாழ்வாங்கித் தன்கருத்தை ஆழ்ந்திருத்தி,
ஒன்றுபல வேறான வரிப்பாட்டு வகையிசைக்க,
அவைகேட்ட கோவலனும் அவள்கொண்ட கருத்துணர்ந்து,

"இவைபாடி, இன்றிவளும் இகழ்ந்திட்டாள் என்அன்பை!
கானல்வரி யான்பாடக், கானல்வரி யல்லாத
ஆனபிற வரிப்பாடல் யாழிசைத்த வாறென்ன?
மிகுபொருளைத் தந்தவரை மிகஅன்பைத் தந்திவளுந்
தகுநேசங் காட்டிவிட்டுத், தரப்பொருளுங் குறைந்துவிட,

எழுந்தமனக் கசப்பையிவள் இசைபாடிக் காட்டிவிட்டாள்,
அழுந்தியஎன் அன்பதனை ஆட்டியே அழித்துவிட்டாள்;
கணிகையர்தங் குணந்தனையே காட்டினாள் கள்ளியிவள்;
வணிகமுறை யேகொண்டு வணிகனெனை யேய்த்துவிட்டாள்;
கலையினாள் என்று கொண்டேன்; கல்மனத்தள் இன்றுதன்னைக்

கலைவேட தாரியெனக் காட்டிவிட்டாள் கணிகையிவள்
உண்மையன்பு உள்நிலையா உலுத்துகுண முள்ளவளை
உண்மைநட்புக் கொண்டுநான் உயிர்க்குயிராய்க் கருதிவிட்டே
மதியீன னாகிவிட்டேன்; முழுப்பேதை தானானேன்;
சதிசெய்த இவளைவிட்டுச் சடுதியிலே சென்றிடுவேன்",

எனநினைந்து கோவலனு மெல்லையற்ற கோபத்தால்,
மனமாறிக் கட்டில்விட்டுக் கீழிறங்கிக் கடுவேக
நடைநடந்து நாட்டியப் பெண் மாதவியை மறந்துவிட
நடுஊரை நோக்கியவன் நடந்திட்டான் நிறைதுயரால்,
கோவலனு மனங்கொண்ட கோபமறிந் தவள்தானும்,

"ஓ கெட்டேன்! மதியிழந்தேன்; ஒருபோக்கில் மனம்விட்டேன்
மணவாளர் மனமுறித்தேன்; மாபாவி யாகிவிட்டேன்;
குணநாதர் கோபத்தைக் கிளறிவிட்டேன் குறும்பாக;
என்செய்வே னேழைநான்; எவ்விதமா யினிவாழ்வேன்?
என்னன்பர் பிரிந்துவிட்டார்; என்னைவிட்டுப் போய்விட்டார்;

போனஅவர் மீளுவரோ? புத்தியற்ற எனைமதித்து,
கோவலனார் கலைச்செல்வர்; குணக்குன்றார்; கண்ணியனார்
நன்று,கடற் கரைவிட்டு நமதுமனைக் கேகிடுவோம்"
என்றவளு வருந்திமிக ஏங்கியே வாடினளாய்,
மனையடைந்தாள்; துயரத்தால் மனங்குழம்பித் தனியாக

மனையடைந்த மாதவியும் மணவாளர் காணாமல்,
மனநொந்து, மதிகலங்கிப் படுக்கையினிற் புரண்டழுதாள்.
தன்பிழையைத் தான்கண்டு, தரிப்புகொளா மாதவியும்,
தன்பிழையைப் பொறுத்துஉடன் தன்மனைக்குப் போந்துவிட
மனமுருக மிகவேண்டி மொழிந்தவளு மெழுதிவிட்டாள்,

பனையோலை யெடுத்தவளும் பண்பாக எழுதிவிட்டுத்,
தன்தோழி நயவந்த மாலையாள் தனையழைத்து,
மின்வேக மாய்ச்சென்று, மணவாளர் கைக்கொடுக்கச்
சொல்லிடவே, தோழியவள் சென்றுடனே, தேடிமிகப்
பல்லிடமும், பட்டினத்தின் புறச்சோலை மரத்தடியில்

நிலநோக்கி நின்றிட்டக் கோவலனைக் கண்டிட்டு.
நிமிடத்தி லவன்மருங்கு நடந்தவளு மணுகினளே.
அருகில்வந்த தோழிதனை அவன்கண்டு தெரிந்துகொண்டு,
அருகுவர எனைநாடி அவசரமு மென்ன?'' எனத்,
தோழியுந்தன் கைநீட்டி ஓலைதனைக் குனிந்தளிக்க,

கோவலனு முகங்கடுக்கக் கூறினான் மனங்கொதிக்க,
''மனமுறித்த மாதவியாள் மற்றேது மாயவினை
தனைநினைத்து இவ்வோலை தனையனுப்ப நினைந்திட்டாள்?
போதுமவள் உறவெனக்குப் பொருளில்லை யினியளிக்கப்;
போய்விடுநீ யவள்மனைக்கே; ஓலைகொடு அவளிடமே;

அறிவிழந்து, அறமறந்து, அவளுடைய அன்பினுக்குப்
பொறிகலங்கிப் புத்தியின்றிப் பேதலித்தேன் புன்மதியால்;
இனியுநான் முன்போல இடரடைந்து மனமழியேன்;
இனியிங்கு நில்லாதே என்னைவிட்டு நடந்திடுநீ''.
இவ்விதமாய்க் கோவலனும் எரிந்துசொலத் தோழியுமே

''அவ்விதமே செய்திடுவேன்''; என்றியம்பிச் சென்றதன்பின்,
''ஆ கொடியோன்! அறிவடங்க உணர்வினுக் கடிமைசெய்த
யானுமோர் ஆடவனோ? யான்கெட்டேன்; ஆணலனான்;
திருமணத்திற் கைப்பிடித்த திருவனைய கண்ணகியை
இருள்மனத்து அகற்றிவிட்டு, பிழைபுரிந்தேன் அவள்தனக்கு!

அவளென்ன நினைந்தாளோ? அவலமுற் றழுதாளோ?
அவளைவிட்ட அரும்பழியும் ஆனையாக் காணாதையோ!
பெரும்பாவி யானேனான்; பெரும்பழிக்கு மாளனேன்;
பெருங்குடிப் புகழழித்த பெருங்கயவனானேன்.
இப்பொழுது எங்குச்செல்ல? இந்நிலையி லென்செய்ய?

அப்பொழுது நான்மறந்த அருமனைவி, அகநெகிழ,
இப்பாவி யெனையேற்க இசைவாளோ? —ஏன்மயக்கம்?
இப்புவியிற் கண்ணகிபோல் இனியில்லை—கற்புடையாள்!
என்னையவள் இகழ்ந்துவிட்டாள்; எள்முனையு மையமில்லை,
என்றுமனந் தேறியவன், நன்றுள்ளத் தெளிவுற்றுக்

கண்ணகியின் பெருங்குணத்தைக், கற்பரசி மதிமுகத்தை,
எண்ணியவன் வணிகர் தெரு இடைநின்ற வீடடைந்தான்.

5. மதுரைப் பயணம்

கருங்கண்ணிக் கண்ணகியாள் கணவன்விட்ட கவலையினால்,
கடுந்தவமே கொண்டிருந்தும், கலக்கநிலை கொண்டிருந்தாள்;
கலையிழந்த முகத்தினளாய், கணவன் முகம் மனநிற்க,
கிளையினரை நினையாளாய்க், கணவனையே நினைந்தவளாய்த்,
தரைபடர்ந்து தளிர்சுருண்டு, தலைவளைந்து, தண்டிளைத்து,

திறங்குலைந்து, வளங்குன்றித் துவண்டிட்ட வனக்கொடிபோல்,
உணவுகுறைத் துறக்கமின்றி, ஒளியுடையுந் தான்தள்ளி,
உணர்வொடுங்கி, அறிவொடுங்கி, உலர்ந்துவிட்ட உடலினளாய்,
நாள்பலவாய் நோன்பிருந்து, நற்கணவன் பிரிவினையே
நாள்முழுதும் நினைப்பவளாய், நினைப்புவே றற்றவளாய்,

நடைப்பொம்மை போலவளும், நகையிழந்த முகத்தினளாய்,
நடந்துமனை, நாள்கடத்தி, வெறுவாழ்வு வாழ்ந்திருக்க,
ஒருநாளில் ஒருபகலில், நீர்முழ்கி, ஒருநினைவாய்,
முருகனையே சிந்தித்து முழுமனதால், வந்திக்க,
மனநிறைந்து தெளிந்திடவே, இடக்கண்ணுந் துடித்திடவே,

“எனதுள்ளம் பொங்குவதேன் எனதுமெய் புளகிக்க?
முருகனே! உன்னருளோ முன்வினையு மொழிந்ததுவோ?
உறுவதுதா னென்னவென உரைத்திடுவா!” யென்றுசொல,
“முன்வினையு மொருவாறாய் முடிந்திடவே மதிதெளிந்து,
எண்மனைக்கு வந்துவிட்டேன் என்னன்பே வருந்தாதே!”

என்றசொற்கள் கேட்டவளு மெதிர்நோக்கக், கணவருந்தான்
நின்றங்குக் கண்கலங்கி நீர்சொரியக் கண்டாளே.
கண்டஅவள் குதித்தெழுந்து, கணவரடி படிந்தாளே.
“என்ன நமைப் பெண்ணரசி! இனியுன்னைப் பிரிந்துவிடேன்,
பிழைபொறுத்துப் பெருமனத்தா லெனையேற்பாய்” என்றியம்ப

மழைபொழிந்தா லெனக்கண்ணீர் முகம்வழிய எழுந்தவளும்
'எழில்மிகுந்த உங்களுடல் இளைத்துமிக உருக்குலையப்,
பழிகாரி பார்க்கின்றேன் பக்கமிருந் துதவாமல்
அப்பிழையை இக்கணமே அன்பர்நீர் அகமறந்து,
இப்பொழுது உளம்பொறுத்து, ஏழையையும் ஏற்பீரே''

என்றிவர்கள் பிரிந்தமனம் ஒன்றிணைந்து பந்தமுறக்
கண்டதே வந்தியுளம் களிக்கடலிற் கூத்தாட,
விண்டாளே கோவலனின் வரவினையே வீடெங்கும்.
இச்செய்தி யங்கிருந்தோ ரிவ்வண்ண மறிந்துவிட,
தட்சணமே தெருவெங்கும் பலரிடமும் பரவியதே.

மாலையிலே,
தோட்டத்தின் தனியிடத்திற் கோவலனுங் கண்ணகியும்
மேட்டுநில மொன்றினிலே மனம்விட்டுப் பேசுகையில்,
''கண்ணகியே! என்செய்வேன்? கைப்பொருளை யிழந்துவிட்டேன்;
என்னுடைய தொழில்தந்த இலாபந்தனைத் தொலைத்திட்டேன்;

கையிற்பண மின்மைகண்ட கணிகையளு மிகழ்ந்தனளே;
நைந்துவிட்ட மனந்தனிலே நலிவுநன்கு மூடியதே''
என்றுகோ வலனுரைக்க இனியமுகத் தவள்சொன்னாள்;
''ஏன்வருத்தம் யானிருக்க, என்சிலம்பு இரண்டிருக்க?
கொண்டுஅவை விலையாக்கிக் கொடுத்தபணம் வாங்கிடுக;

கொண்டுஅதைக் கொடுத்திடுக கணிகைமனக் குறைதீர''
என்னசொன்னாய் கண்ணகியே! ஏளனமா கூறுகின்றாய்?
என்னருமைப் பெண்ணரசி! இனியுமுன்னைப் பிரிவேனோ?
இதுஉறுதி! இனிமறவேன், இனிப்பிழையேன், நீயேகாண்!''
இதுகூறக் கோவலனும், ஏந்திழையாள் கண்கலங்கி,

''ஏளனமாய்க் கூறிவிடல் என்அன்பர்க் குகந்திடுமோ?
ஏளனமே ஏதுமில்லை உண்மைதனை யேசொன்னேன்''
எனமொழிந்து விம்மியழ, இரங்கியவன் விரைந்துரைப்பான்;
''என்கண்ணே! வருந்தாதே; என்வறுமை வேகந்தனில்
சொல்லியதை மறந்துவிடு; சிறுகோபம் யாற்றிவிடு;

வல்வினையின் விளைவினுக்கு வழிசெய்து வாழ்ந்திடுவோம்.
எந்தனுக்கு ஒருவழியு மேற்றதாய்த் தோன்றுவதை
உந்தனுக்கு உரைத்திடுவேன், உன்எண்ண முரைத்திடுவாய்!
சிலம்புகளின் விலைகொண்டு சீரான வணிகத்தை
நலம்படவே செய்து, நாம்குடும்பம் நடத்திடுவோம்.

சீரழிந்த நிலையினிலே, சிறப்பிழந்து இவ்வூரில்
நேர்மையாய் நாம்வாழ நினைத்தல் பிழையாகுமம்மா!
காவிரிப்பூம் பட்டினத்தை கருத்தகற்றிப், பாண்டியரின்
காவலுள்ள பட்டினமாங் கனமதுரை போயடைந்து,
அங்குநம் தொழிலினையே அடக்கமாய்த் தொடங்கிடுவ ;

இங்குவிட்டு நீயுமுடன் நீங்கிவிடின் நன்றாகும்;
உனதெண்ண மெதுவோநீ உள்ளபடி யெடுத்தியம்பு"
எனக்கேட்ட கணவரிடம் இனியஅன்பு கொண்டவளும்,
"என்கணவர் எதுசொலினும் ஏற்றலது என்கடமை,
என்னன்பர் எங்குளரோ அங்கிருப்ப தென்வாழ்வு;

மாமதுரைப் பட்டணமோ மற்றெந்தப் பட்டணமோ
மேவிவிட நீங்களெனை ஏவிவிடின் நான்வருவேன;
மனங்கொண்டு நான்வருவேன; மகிழ்ச்சியுடன் நான்வருவேன்"
எனச்சொல்லக், கோவலனும் எல்லையிலாக் களிப்புண்டு,
"நன்றன்பே! நாளைத்தினம கிளம்பிடுவம் வைகறையில்,

நம்முடைய தந்தைதாய் நமதெண்ணந் தெரிந்துகொளின்,
தடுத்திடுவ ராகையினால், தெரிவிக்கா திருந்திடுவம்;
நெடுந்தொலைவு நாம்செல்ல அநுமதியார் அவர்களுமே"
ஈதுசொல்லிக் கோவலனும் எழுந்திருந்தான; கண்ணகியும்,
"மாதுநான் மனமகிழ்ந்தேன்; மன்னருடன் சென்றிடுவேன்;

கணவரு கிருந்துநான் கணவருடல் காத்திடுவேன்;
குணமறிந்து, குறிப்பறிந்து, குற்றேவல் புரிந்திடுவேன்"
என்றுநினைந் தவன்பின்னர் ஏகினாள் துள்ளமனம்.
அன்றிரவு,
நடுச்சாமம் முதற்கொண்டே நல்லுறக்கம் பிடியாமல்

படுக்கைதனிற் புரண்டிருந்து, பொழுதுமே புலர்ந்திடுமுன்,
எழுந்தவர்கள் எவருமறி யாதபடி ஏகினரே;
எழுந்தமனை விட்டிறங்கி ஏகினரே வீதிதனில்;
மதுரையம் பதியடைய மனக்கஷ்ட மெதுவின்றி,
எதுவழியா மென்றிவர்கள் எண்ணிமிகக், காவிரியின்

வடகரையின் வழிபிடித்து, வளர்பயணந் தொடங்கினரே;
தடம்பற்றித் தாம்நடந்தார், தமதெளிமை தாமெண்ணி.
காவிரியின் கரையழகுங், கரையில்படர் கொடியழகும்,
மா,தென்னை, வாழைகளும், மலர்குலுங்கி வளர்செடிகள்
வண்டல்மண் முளைத்தவைகள் வளநீரை யுட்கொண்டு,

கண்டகண்ட இடமெல்லாம் கண்கவர்ந்து இனிமைதர,
கொண்டதுயர் தனைமறந்து கோவலனுந் தழைத்துமனம்
கண்டஒலி தானெழுப்பிக் கனிவாகத் தான்பாடக்
கண்ணகியுங் கேட்டதனால் கடுவழியின் களைப்பின்றி
முன்னடந்த கணவரையும் பின்பற்றிப் போனாளே.

வெயிலேற, நிழல்தங்கி வியர்வைதனை நீக்கியவர்,
வயல்கள்பல விளைபொருள்கள் வீசமணம், வெம்மையினைக்
களைந்துவிடத் தாம்படுத்தார் தண்புல்நிறைத் தரைமீது;
களைப்பாறி யெழுந்தவர்கள் கொடிவழியை யேபற்றிக்,
கால்நடையிற் காதவழி கடப்பதற்குள், கண்ணகியும்

காலோய்ந்து கடுத்துவிடக், குரல்தளரக், கணவரிடம்
"எதிரில்வரும் சோலைதான் மதுரைப்பதி யோ?என்ன!
அதுகேட்டக் கோவலனும் அவள்நோக்கிக் கூறிடுவான்:
"பாவம்!நீ யென்செய்வாய்! பட்டினத்தி லிருந்ததனால்
நோவறியாய்க் கால்நடந்து; நாம்செல்லும் மாமதுரை

சோழநாட் டெல்லைதனுக் காறைந்து காதமது;
சோழநாட் டெல்லையினைச் சேரவில்லை யின்னுநாம்;
மென்னடையா நடந்திடுவாய் மென்பாதம் நோகாமல்,
பொன்னியன்னை தன்வளத்தைப் பார்த்துநீ துயரழிப்பாய்!"
எனஉரைத்துக் கோவலனும எழில்குறைந்த கண்ணகியின்

மனந்தேற்றி முன்செல்ல, மாதுகளித் துடன்சென்றாள்.
வழிதனிலே,
சோலையொன் றினைக்கண்டு சோகம்விட்ட சதிபதிகள்
சோலைக்குள் நுழைந்தவர்கள் ஆருகதர்க் குற்றபள்ளி
கண்டனரே, பள்ளியினிற் கவுந்தியடி களைக்கண்டார்;

கண்டவரைக் கைகுவிக்கக் கவுந்திசந் யாசினியும்
நல்லாசி கூறினளே நன்கவரை உபசரிக்க,
பொல்லாத காலத்தாற் பொருளீட்டப் பொன்மதுரைத்
தலநோக்கித் துணையின்றித் தாஞ்செல்லுங் குறிப்புணர்ந்தத்
தவக்கோலக் கவுந்தியளுந் தன்மனத்திற் கசிவுற்று

"யான்மதுரை செல்லஉளேன் அருகதே வரைக்காண,
ஆருகதக் குருமாரின் அறவுரைகள் கேட்டிடவும்;
உங்களுடன் சேர்ந்துவரின், உங்கள்மனச் சோர்வழித்து,
உங்களுக்கு முற்றபல உதவிகளும் புரிந்திடுவேன்"
எனக்கூறி யெழுந்தாளே எண்ணரிய தவத்தினளுந்;

தனக்குரிய துணைவரவே துணிவுற்றாள் கண்ணகியும்.
இவ்வண்ணம் மூவருமே இனிதொத்து எழுந்தனரே,
அந்நெடுந் தொலைப்பயணம் அயர்வின்றித் தாங்கழிக்க.
சோழவள நாடகன்று, செம்பொன்னி நீர்சூழ்ந்த
சீரங்கத் தலமடைந்து சமணமதச் சாரணரைத்

தாம்பார்த்துத் தலைவணங்கி, அருகபிரான் தனைப்புகழ்ந்து,
ஆங்கிருந்த ஓடத்தில் ஆற்றுவெள்ளந் தாந்தாண்டித்.
தென்கரையிற் சேர்ந்தங்குத் தண்வனத்துத் தருநிழலில்
தங்கினரே; அப்பொழுது அங்குவந்த தப்பொழுக்க
நெறிவாழ்வோர், நலமிழந்தோர், ஆண்பெண்க ளானஅவர்

முறித்துமனம் பேசினரே மதுரைசெலும் பதிசதியை;
அதுகேட்டக் கவுந்தியளுங் கடுங்கோபங் கொண்டவரை
அதுகணமே நரியுருவ மாகிவிடச் சபித்திட்டாள்;
இரங்குமனக் கண்ணகியும் இவர்சார்பில் வேண்டிடவே,
''மிருகங்கள் நிலையினிலே ஒருவருட மிருந்திடட்டும்

அதன்பிறகு இச்சாப மழிந்திடுக!'' என்றாளே;
அதையறிந்த கண்ணகியும் அகந்தனிலே அமைதிகொண்டாள்
மூவருந்தா னதற்கப்பால் மதுரைவழி யறிந்துகொண்டு
ஆவலுடன் தென்திசையில் திரும்பிவழி தாம்நடந்தார்.
வழிநடந்து இருபுறமும் வனங்கள்மிக நெருங்கிவிட,

விழிகொண்டு அறிந்தனரே வியந்துமிக அஞ்சினரே;
''காட்டுவழிப் பாதையிது கள்வர்களின் பயமிருக்கும்;
காட்டில்திரி விலங்குகளும் கடுகிவந்து வதைத்துவிடும்,
எனமனத்திற் பீதிகொண்டு எப்புறமும் பார்த்துச்செல,
வனமொன்றில் வேடர்குலம் வந்தவர்கள் வட்டத்திற்

கூடியொரு கோயிலின்முன் கும்பிட்டுத் தொழுதனரே.
பாடியவ ரெழுப்பிவிட்ட பாட்டொலியுங் கேட்டிடவே,
வழிநடந்த மூவருமே வழிபிரிந்து, வனஞ்சென்று,
வழிபாட்டில வேடரெலாங் கூடிநின்ற கோயிலிலே
வேறிடத்தி லொருபுறமாய் வந்தமர் திருந்தனரே.

வேடமக்கள் வனதெய்வப் பூசனைசெய் பொறுப்பேற்ற
வேடர்குலச் சாலினியின் ஆவேசச் சொற்படியே
வீடகன்று வேடரெலாம் வந்தங்கும் பூசனையைச்
செய்துள்ளஞ் சிறந்திடவே, சாலினியைச் சூழ்ந்திருந்து,
மெய்த்தெய்வம் அவளாக மனங்கொண்டு அவள்புகழ்ந்தார்.

சாலினியுந் தெய்வமுற்றுச் சொல்லிவந்தாள் தெய்வக்குறி;
ஆவேச மூண்டவளு மாங்கிருந்த மூவரையுங்
கண்டுகடைக் கண்ணாலே குதித்தெழுந்து குரலெடுத்துக்
கண்ணகிக்குக் குறிசொன்னாள்: "கொங்குநாட் டவளேதான்
கண்டிருங்கள்! குடமலையாள் தென்தமிழ்க் கற்பரசி!"

என்றுசுட்டிக் காட்டிவிட எல்லோருங் கண்ணகியை
நோக்கிவிடக் கருங்கண்ணி. "மூப்படைந்த கிழவிமனப்
போக்குதனிற் பேதலித்துப் பேசிட்டாள்!" என வெட்கிக்
கோயிலிடம் விட்டெழவே, கோவலனுங் கவுந்தியளுங்
கோயில்விட் டவளுடனே கொடிவழியை யடைந்தனரே.

கவுந்தியடி களுமங்குக் கோவலனைத் தான்பார்த்து,
"கிழவிமொழி யவமதியேல்; கருத்ததனை யார்கண்டார்?
பின்னிகழ்ச்சி முன்னறிந்து பேசினளோ மெய்மறந்து?
பெண்பேசுங் குறிச்சொல்லும் பலித்திடுமென் றுரைத்திடுவர்"
என்றுசொல்லி முன்னடந்தா ளிருவருமே பின்செல்ல;

தோன்றுபுகழ் மதுரைநகர் தொலைவினிலே தோன்றியது.
அவ்வேளை,
எழுமனத்துக் கோவலனும் வழியிலொரு குளங்கண்டு
இருபெண்டிர் தனையிருத்தி ஒருபுறமாய்த் தான்போக,
அங்கேயோர் அந்தணனும் அவன்முன்னர் அருகடைந்து,

"இங்குஉமைக் கண்டதென்றன் இனியநல்ல காலமதே;
நான்புகார்ப் பட்டினத்தான்; நெடுநாளாய்ப் பின்தொடர்ந்தேன்;
நாடகத்தாள் மாதவியாள் நலம்விட்டு, மனமழிந்தாள்,
ஓலையுடன் போகவிட்டாள், கோசிகனும் பெயர்கொண்டேன்;
ஓலையிதோ!" என்றளிக்கக், கோவலனும், அதைவாங்கிக்

கண்ணோட்டிப் பார்த்தானே; கோசிகனும் பேசிவிட்டான்:
"என்னேக்கங் கொண்டோநீர் ஏங்கியன்று ஏகிவிட்டீர்;
நாடிவந்த தோழிதனை நீர்கடிந்து திருப்பிவிட,
வாடினள் மாதவியாள்; வசமிழந்து வீழ்ந்திட்டாள்;
உமைப்பிரிந்த ஒருநினைவே உள்ளத்தி லோங்கியெழ,

உமைக்காண ஏங்குகின்றாள்; உண்மையே உரைக்கின்றேன்"
எனச்சொல்லக், கோவலனும் இளகிமனம், ஓலைப்பொருள்
மனத்தறிந்து, 'மாதவியும் மாசற்ற மாதாவாள்!'
எனஉள்ளம் நினைந்தவனும் மனத்தளர்ச்சி நீக்கிவிட்டான்:
மனத்தளர்ச்சி தான்விட்டு, மாதவியை வாழ்த்திவிட்டான்.

அவ்வோலைப் பொருளதுவும் அமைந்ததாற் பொதுவாக,
"இவ்வோலை தன்னையே எந்தன் தாய் தந்தைக்களி"
எனக்கூறி ஓலைதர, மனமொப்பிக் கோசிகனும்
வனவழியே திரும்பிவிட, விட்டபெண்க ளிடமடைந்தான்
மதுரைவழி தொடர்ந்திட்ட மூவருமே முன்னடந்து,

மதுரைமதிற் புறத்துள்ள புறஞ்சேரி புகுந்திட்டார்.
அப்பொழுது அங்குவந்த ஆயர்குல மாதவியாள்
அச்சேரி தனிற்கவுந்தி அடிகளையுந் தான்கண்டு,
வணங்கினாள்; வணங்கியவள் வாழ்த்தினாள் கவுந்திகளும்;
"குணஞ்சிறந்த குலததவளாம் இவளைநம் கண்ணகிக்குத்

துணையாவாள்" எனநினைந்து, அணைத்தவளைத் தனதெண்ணம்
இணைந்தமனம் விட்டியப்ப, இனியமொழி மாதரியும்
"கண்ணகியும் கோவலரும் என்மனையி லிருந்திடட்டும்
வண்ணநிறை மடந்தையிவள் வளர்துணையா யிருந்திடுவேன்"
என்றழைத்துச் சென்றாளே இளநகையுஞ் சிறந்திருக்க.

அன்பிலுறை கவுந்தியளு மகன்றாளே கிளைவழியாய்.

6. கோவலன் கொலையுண்டது

மாதரியின் ஒப்பற்ற மனந்தனிலே உதித்திட்ட
ஆதரவும் அன்பதுவும் அகங்கொண்டு மனங்குளிர்ந்த
கோவலனுங் கண்ணகியுஞ் சோகமெலாங் குறைந்தொழிய,
"என்னேஇவ் இடையர்குல இளநங்கை இன்னொழுக்கம்!
தன்னலம்போற் பிறநலமும் தன்மனத்துப் போற்றுகின்றாள்;

படித்தறியாப் பெண்ணிவளே பணமில்லாப் பெண்ணிவளே
குடிப்பண்பின் சிறப்பிதுவோ? குலத்தமிழர் சிறப்பிதுவோ?
ஆயர்குடிப் பிறந்தஇவள் கால்நடைகள் புரந்திட்டு
ஆயர்தொழி லருமையாய்த் தாங்கியிவள் தன்குடும்ப
வருவாய்க் குதவிவிடும் வண்ணத்தால் உளஞ்சிறந்தாள்;

எருமை,பசு தரும்பாலும் இனியநெய் தயிர்விற்று,
மக்கள்வாழ் வினுக்குதவி மனங்களிக்க வைத்திட்டுத்,
தற்கொண்டான் தம்மக்கள் தான்காத்த பண்பிதுவோ?"
என்றுமே மாதரியின் சென்றாயர் சேரிதனில்
நன்றடைந்தார்; நல்லணங்கு நல்விருந்தாற் களைபோக்கித்

தன்கணவன் அநுமதிக்க, தம்புதிய மனையொன்றில்,
நன்மையுடன் வாழஇவர், நலப்பொருள்கள் வைத்திட்டுத்,
தன்மகளாம் ஐயைதனைத் துணையாக வைத்திட்டாள்
உணவுவகைக் குற்றபொருள் கொண்டங்குக் கண்ணகியும்
உணவாக்கிச் சுவைப்படவே, உண்பதற் குள்ளழைத்துக்,

கணவர்முன் கலமமைத்துக், கறிவகைகள் வைத்தபின்னர்
மணந்தருநல் சோறிட்டு, மனங்களித்துப் படைத்தனளே.
தன்மனைவி அன்புடனே தான்படைத்த அன்னவகை
தன்னுள்ளந் துள்ளியெழக் கோவலனுங் கொண்டானே.
உணவருந்தி அவனுமெழ, உட்கார்ந்தாள் அவளுண்ண;

கணவனு மனைவியுமே களித்துண்டு, மனைதன்னின்
முன்புறத்தி லமர்ந்தனரே மாதரியின் அப்பெண்ணி;
தன்னிலையிற் கருத்தோடக், கோவலனுங் கணத்தினிலே
கவலைக்குறி முகங்காட்ட, கண்கள்மிகக் கலங்கிவிட
அபலைப்பெண் கண்ணகியும் அவனிலையைக் கண்டறிந்து,

"முகம்வாடி யிருப்பதேன்? மனமாழ்ந்து நினைப்பதென்ன?
அகங்கருகிப் புண்படவே அடியாள்செய் பிழையெதுவோ
செய்தபிழை சொல்லிடுங்கள் சிற்றறிவுச் சிறுமியெற்கு!"
மைவிட்ட கண்ணுடையாள் கைகூப்பிக் கேட்டுவிடு,
உளம்பதைத்த கோவலனும் உடன்திரும்பிக் கூறிடுவான்:

"களங்கமற்ற கண்ணகியே! குறையேது முன்னிடத்திற்
கண்டதில்லை; ஐயமில்லை; குறையாவு மென்னிடமே
கண்டுவிட்டேன; கருத்தழிந்தேன் கணநேரப் பொழுதினிலே;
பெருந்தனத்தை யழித்திட்டேன, பெருமைதனை யொழித்திட்டேன்
அருமைநிறை நமபெற்றோர் அன்புறவும் நலிந்ததுவே.

பட்டினத்துப் பிறவணிகர் பார்க்கமனங் கூசியதே;
ஒட்டிநின்ற உறவினரை உவந்தேற்க உள்ளமில்லை
மனைவிட்டுத், தெருவிட்டு, மாபெருமூர் தனைவிட்டு,
வினைதந்த விளைவதனின் வழிப்பட்டு, வளமறந்து,
செல்லமக ளாய்வளர்ந்த சுந்தரியே! உந்தனையும்

வல்வழியில் இழுத்துவந்து, வன்கண்பல இழைத்திட்டு,
என்மனமு முளைந்ததுபோல் உன்மனமு முளையவிட்டேன்;
என்செய்வேன் கண்ணகியே! இத்தனைக்குங் காரணமாய்
நின்றிட்டேன் நினைவழிந்து, நல்லொழுக்கத் துணைதுறந்து,"
என்றுள்ளம் நொந்துமிக ஏழைக்கோ வலன்கூறக்

குழைந்தமனக் கண்ணகியுங் குரல்தடு மாறிடவே,
மழைபோன்று கண்ணீரும் முகத்தினிலே வழிந்தோட,
''ஈதென்ன நீங்களுமே இவ்வண்ணம் நிலைதளரின்,
ஏதுரைப்பன் நல்லமொழி, என்செய்வேன் நானேழை!
எத்தீனம் வந்திடினும், எல்லவரும் வெறுத்திடினும்

புத்தியதின் தீவிரத்தால் பொறுத்துநாம் தணிந்திடுவோம்;
வறுமைநிலை பற்றிப்பின் வந்திடுதற் கென்செய்வோம்?
வறுமையதோ, வளமதுவோ வாழ்வினிலே வரலியற்கை;
பொறுமையே பேணிநாம் புத்திபலம் பெற்றிடுவோம்;
வறுமைதனை வென்றிடுவம், வணிகத்தொழில் வளர்த்திட்டு,

சிலம்பெடுத்துச் செல்லுங்கள் செல்வர்மனை தனைநாடி!
சிலம்புவிற்று வாருங்கள் சிறந்தவிலை வாங்கிவிட்டு;
சிறுவணிகந் தொடங்குங்கள்: சிலநாளில் தொழிலதுவும்
பெருவணிக மாய்ப்பெருகும்; பெருஞ்செல்வ மண்டிவிடும்
அதன்பிறகு நந்துன்பம் அழிந்துவிடும் நாளடைவில்;

எதன்பொருட்டுங் கவலைப்படல் இழிவாகுங் கூறிவிட்டேன்''
என்றவளும் மொழிந்திட்ட இனிமைதரு மொழிகளையே
நன்றேற்று மனத்தினிலே, நற்சிந்தை முனைப்புற்ற
கோவலனும் முகத்தினிலே களைகாட்டி மகிழ்ந்துடனே,
சோகமொழித் தத்தருணஞ் சொல்லிடுவான திடமுடனே:

''உண்மைநிலை யறிவிக்கும் உன்மொழிகள் அருமொழிகள்
அம்மொழிகள் என்மனத்து அமுதமே பெய்ததுகாண்!
இருசிலம்பி லொருசிலம்பை இப்பொழுது கொடுத்திடுநீ;
தெருக்கள்பல மதுரைதனில் திரிந்துநான் மதிப்பறிந்து,
உற்றவிலை கொடுப்பவர்பால் விற்றதனைக் கொண்டுபணம்

பெற்றிங்குத் திரும்பிடுவேன் பொழுதுசாய்ந் திடுமுன்னே'',
என்றங்குக் கோவலனும் எழுச்சியுற்றுக் கூறியதைத்
தன்னுள்ளங் கொண்டுவிட்ட திருவனைய கண்ணகியும்
மனையுள்ளே விரைந்தோடி, மூட்டையினில் வைத்திருந்த
இணையற்ற இருசிலம்பில் ஒருசிலம்பை யுடனெடுத்து,

ஓடிவந்து கோவலன்கை ஒளிச்சிலம்பைக் கொடுத்தாளே.
ஆடியொலி பாப்பிவிடும் அணிச்சிலம்பைப் பெற்றவனும்
ஒலிகேட்டுச் செவியினிக்க, உவப்படைந்து சிலம்பினையே
கலிதீர்க்க வந்ததுவாய்க் கருதியுளம் வாழ்த்தினனே:
''கண்ணகியே! வருகின்றேன் காற்சிலம்பை விலையாக்கி;

புண்படேல் தனிமைநினைந் துன்மனத்தில் தவிப்புமிக;
சிலம்புவிலை பெற்றதுமே செல்வியே பணத்துடனே
பறந்துவந் திங்கடைவேன் பயமின்றி யிருந்திடுவாய்;
ஐயைதனை யருகிருத்தி, அறிந்துவிடு ஊர்விவரம்;
ஐயமெதுங் கொள்ளாதே; அரும்பொழுதிற் குள்வருவேன்

ஈதென்ன இப்பொழுதே இருகண்ணுந் துடைக்கின்றாய்!
மாதுஉயர் மதியுடையவள் மனங்கலங்கல முறையாமோ?
என்மனத்துக் குறுதிதந்த உன்மனமு முழல்வதென்ன?
என்கண்ணே! வாய்திறந்து இன்மொழியில் வழியனுப்பு"
என்றுசொல்லி யருகடைய, இளமுறுவ லடைந்தவளும்

"நன்றுபோய் வாருங்கள் நலமுடனே!" எனச்சொன்னாள்.
கோவலனும்,
கைவீசிக், காலோட்டிக் கடுநடையே கொண்டுடனே
தயிர்க்கூடை தாங்கியவர் திரும்பிவருந் தெருவழியே
சென்றவனும் புறவீதி சிலதாண்டிப், போந்தனனே.

நின்றநீள் வீதிகளும், நவமணிகள் வீதிகளும்
அங்காடி வீதிகளும், அம்பொன்மணி வீதிகளும்,
அங்குமுன் முற்றங்களில் அறுவைசெயும் மணிவீதி,
கூடைகளிற் கோணிகளிற் கூலநிறை கடைவீதி,
மாடங்களும், மன்றங்களுஞ், சந்திகளுஞ், சதுக்கங்கள்

பலவான வீதிகளும் பரந்திருந்த பட்டணத்தில்
பலவான சிந்தனைகள் பலவாறாய்ப் போரிடவே,
கால்நடையாய் நடந்திட்டான கோவலனுங் கால்கடுக்க
காலவினை பிடித்துந்தப் பீடிகையாம் பெருந்தெருவில்
போந்தானே; அவன்முன்னே பொற்கொல்லர் புடைசூழப்

போர்வீரப் பாண்டியனின் பொற்கொல்லன் வந்தானே.
கோவலனு மவனடைந்து கைச்சிலம்பைக் காட்டியுடன
"காவலன தன் தேவிதனுக் காகுமிந்த காலணியும்
இதன்விலையை மதித்திடுவா" யெனக்கூறி மருங்கிருக்க,
அதையுற்றுக் கவனித்து, ஆச்சரியங் காட்டியவன்

"மிக்கபொருள் மதிப்புள்ள மணிச்சிலம்பை மன்னவனே
கைப்பொருளைக் கொடுத்திட்டுக் கொள்ளுவதற் குரியவனும்;
நான்அரண் மனைசென்று நற்சிலம்பின் விவரமெலாம்
தான்சொலி வருகின்றேன்; திரும்பும்வரை வலப்புறத்து
ஈங்குற்ற கோயிலிலே நீயிருப்பா யென்றிருத்திப்

பாங்குடனே போயினான் பாண்டியனின் மனைநாடி
அரசியார் காற்சிலம்பை யபகரித்தேன்; அச்செயலும்
அரசருக் கெட்டுமுனே அழுந்திடுதற் கேற்றபடி
இவன்வந்து சிக்கிவிட்டான், ஈசனருட் சிறப்பதுவால்,
இவனே தா னெடுத்திட்டான் அரண்மனையி லச்சிலம்பை

எனஇவனைக் கள்வனா யிப்பொழுதே காட்டிவிட்டு
என்சூதை மறைத்திடுவேன், என்பெருமை மீட்டிடுவேன்',
என்றுபொற் கொல்லனுமே இருள்மனத்தி லெண்ணிப்போய்
குன்றுதனை யொத்தெழுந்து கொடுமுடியு மெடுத்திருந்த
அரண்மனையின் வாயிலையே அகமகிழ அடைந்திட்டான்.

அரண்மனையி லரசனுந்தன் தேவிதனைத் தேடிச்செலப்
பொற்கொல்லன் வரவறிந்து, பொறுத்தவனை வரச்சொல்ல,
பொற்கொல்லன் போந்தங்குப் பணிவுமிகப் புகன்றிட்டான்:
"பாராளும் பாண்டிமாப் பேரரச நீவாழி!
பாரிலுள்ள திருடர்கட்குள் பெருமாயத் திருடனவன்;

காவலுள்ள அரண்மனையிற் கள்ளத்தனம் அவன்செய்தான்
காவலரை மயக்கிவிட்டுக் காற்சில்ம்பைக் கவர்ந்திட்டான்;
அக்கயவன் பிடித்திட்டேன் அரும்பாடு பட்டுநான்
அக்கணமே தெருக்கோயில் அமர்த்தினேன் தந்திரமாய்;
அரசபிரான் ஆணைதனை யறிவிக்க!'' எனவேண்ட

அரசனுமே அவசரமாய் அங்குநின்ற காவலர்க்குக்
கள்வன்றனைக் கொன்றுடனே காற்சிலம்பு கொண்டுவர
வல்லாணை யிட்டகன்றான்; வேலையாள் பின்தொடரப்
பொற்கொல்லன் பரபரப்பாய்ப் பீடிகையாந் தெருவந்து,
நற்கோயில் நண்ணியவன் நின்றிருந்த கோவலற்கு

அரசரே ஏவ,இவர் அச்சிலம்பு இவண்காண
அவசரமா யடைந்துள்ளார்'' என்றுரைக்கக் காவலரும்
கோவலனைக் கண்கூர்ந்து கண்டனரே; கணமதிலே
கோவலனின் வெள்ளைமனம் வெளிப்பட்ட வகைநோக்கி,
'இவர்முகத்தின் தோற்றத்தால் இவர்கொண்ட தேகத்தால்

இவர்கள்வ ரெனக்கூறல் எள்ளளவும் பொருந்தாதே;
கைகூசும் கொலைசெய்யக்: கடும்பாவம் சூழ்ந்துவிடும்;
பொய்யதனைப் பேசிவிட்டார் பொற்கொல்லர் பழிமறந்து'',
என்றுசொல்லக், கொல்லருந்தான் 'ஈதென்ன வல்வழக்கு?
நன்றுமன்னர் ஆணையினை நழுவவிடல் அழகாமோ?

காவலர்தங் கடமைதனிற் குற்றமெழக் காணுவதோ ?
ஏவலதை உடனறிந்து ஏனென்ற உரைவிட்டு
அவ்ஏவல் செய்வதுவே அவர்கடமை யென்றறிக!
இவ்வுண்மை இருக்கட்டும்; இன்னுமொன் றியம்பிடுவேன்;
கள்வர்களின் தன்மையினைக் காவலரே! கூறிடுவேன் ;

கள்வர்களுக் குற்றதுணை, கள்வர்தொழி லிலக்கணத்தால்,
மந்திரமும், தெய்வமுமே, மருந்துவகைத், தகுநிமித்தம்
தந்திரமும், தகுஇடமும், காலமுடன், கருவியென்ற
எண்வகையால் அவைகொண்டு எவரிடத்து மெவ்விடத்தும்;
ஒண்பொருளைத் திருடியவர் ஓடிமறைந் திடுவாரே.

அதைவிளக்க ஒருகதையும் அறிந்துளதை உரைத்திடுவேன்;
அதுஉண்மை யெனக்கொள்வீர்; அதனுண்மை யுணர்ந்திடுவீர்.
முன்னொருகால் மன்னர்மனை முன்வாயிற் புறம்வந்து,
நின்றொருவன் தூதனென நவின்றிட்டான்; தூதனைப்போல்
நன்குடுத்து, நற்பணிவாய் நயங்காண நன்குரைத்து,

அன்றிரவு வந்தவுடன், அவன்பெண் வேடத்துடன்,
அரண்மனையிற் புகுந்திட்டான்; அருநிழலிற் பதுங்கிட்டே ;
அறைகள்பல ஆய்ந்தவனும், அங்கிருந்த பள்ளியறை
திறந்திருக்கத், தைரியமாய், ஓசையிடா துள்நுழைந்து,
உறங்கியநம் இளவரசர் உடலிருந்த ஒளிமாலை

கழற்ற,அவர் கண்விழித்துக், கள்வனெனக் கண்டெழுந்து,
குழலைவிட் டுடைவாளை உருவிவிட, உறைபிடுங்கி
வாளையிள வரசருமே வீசுந்தொறும் உறைகாட்டி,
வாள்குத்து தனைக்காக்க, மற்போரைத் துவக்கிவிடக்
கண்டுவிட்ட கள்வனுமே, கற்றானைக் காட்டிவிட்டுக்,

கணந்தனிலே மறைந்துவிட்டான் கதவுவழிமாய மதாய்
கள்வர்கலை விவரத்தைக் கேட்டீரா விளக்கமுற!
கள்வனே இவனுந்தான! கனச்சூது இழைத்தவனே''
எனக்கொல்லன் சொலக்கேட்ட, இனமறியாச் சேவகனும்
மனவேகத் தால்வாளை முன்வீசி வெட்டினனே;

வெட்டுண்டு, கோவலனும் வெறுநிலத்தில் வீழ்ந்தனனே;
விட்டுவிடா வினைவசத்தால், வீழ்ந்துஉடன் மடிந்தனனே.
இடைச்சேரியில்,
கோவலனுந் தெருவிறங்கிக் கோடியினில் திரும்பிவிட
மாதரியும் வையைநதி மூழ்கிவர விரைந்தாளே:

நீரெடுக்குங் குடந்தனையே நீரலைக்குங் கரைவைத்து
நீர்த்துறையி லிறங்கிவிடப் பட்டணத்துப் பெண்ணொருத்தி
அத்துறையில் தானிறங்கி ஆய்ச்சியிட மணுகியளாய்,
மெத்தகுரல் தாழ்த்தியவள் "மாதரியே தெரிந்திடுவாய்!
இந்தஅநி யாயமெங்கும் நிகழ்ந்திருக்க நியாயமில்லை;

இந்தமா பாண்டியரு மிதுவரையிற் புரிந்ததில்லை.
பூம்புகார்ப் பட்டினத்தான் பீடிகையாம் வீதியிலே
புகுந்தின்று, பாண்டியரின் பொற்கொல்லன் தனைக்கண்டு,
சிலம்பொன்றைக் காட்டி,விலை செப்பிவிடக் கேட்டிடவே,
சிலம்பினையே திருடியவன் இவனெனவே காட்டிவிட,

அரசனிடஞ் சொல்லிவிட்டு, அவன்தனையுங் கொல்வித்தான்.
அரசருமே அவசரமாய் அநியாயம் செய்திட்டார்"
என்றுசொல மாதரியும், "என்னஇது மாபாவம்!"
என்றலறிக் கரையேறிக் குடமெடுத்துக் கலங்கிமிக,
ஓடினாள் ஓட்டமதாய் இடைச்சேரி யினைநாடி;

ஓடியவள் ஆங்கடைந்து, கண்ணகியைக் கண்டுடனே,
தான்கேட்ட செய்திகளைத் துயர்கூரச் சொன்னாளே;
மான்விழியாள் அதுகேட்டாள்; மதிகலங்கி மயங்கிவிட்டாள்;
மயக்கம்விட, எழுந்தவளும், "மாண்டீரோ! என்னன்பே!
சுயக்கவலை போக்கிவிட்டுச் சுவர்க்கமே புகுந்தீரோ!

என்னைவிட்டுப் போனீரே, யாரெனக்குப் புகலிடமே
மண்ணிலினி எந்தனுக்கு மங்களவாழ் வேதுமிலை.
ஆ!கொடியேன்; ஆ!சிறியேன்; ஆ!தனியேன்; ஆ!கெட்டேன்;
ஆ!அதிர்ச்சி தாங்கலையே, அநியாயந் தனைக்கேட்க;
பொழுதுசாய்ந் திடுமுன்னர் போந்திடுவேன் என்றீரே!

அழுதுசாய்ந் திட்டேனே; அவலநிறைந் திட்டேனே!
என்செய்வேன் பாவிநான்? ஏனெனக்கேட் பாரிலையே!
முன்செய்த வினையதுவும் மூண்டதோ வசமாக!
தந்தைதா யிழைத்திட்ட தவப்பயனு மிதுதானோ?
கந்தா!உன் கருணைதனைக் காட்டமன மிளகலையோ?

ஆ!நெஞ்சு பொறுக்குதிலை அருநாதர் பிரிவதனை;
ஏ!விதியே! உன்கொடிய ஏவலினா லுற்றதிது;
இணைபிரியாச் சதிபதிகள் இணைபிரியச் செய்தனையே!
இதுதகுமா? இதுமுறையா? இதுதருமந் தானோ?நீ
அன்பருயிர் கொண்டதுவும் அரனாரின் கட்டளையேல்,

என்னுயிருங் கொண்டிடுவாய்! இதுஎன் கட்டளையே!
ஆம்!கற்பு நிலைமங்கை அருங்கணவர் பிரிந்துயிரும்
வாழ்ந்திடுத லுண்டோசொல் வளத்தமிழ ருலகினிலே!''
எனப்புலம்பிப், புவிமீது வீழ்ந்தவளைப் பிடித்திட்டு,
மனஞ்சோர்ந்த மாதரியும் மடியில்தலை யிருத்தி,யவள்

படுத்தங்குத் துயர்தீரப் பக்கமிருந் தணைத்திட்டாள்;
அடுத்தகணம் கண்ணகியின் அகன்விழிகள் திறந்துவிடக்,
''கண்ணகியே! கண்மணியே! கலங்காதே, கதறாதே!
புண்பட்ட உன்மனத்துப் பேரிடியும் புகுந்துவிடல்
பெரும்பாவம்! கொடும்பாவம்! பெண்பாவம் பொல்லாது;

பொறுத்திடுநீ, பதறாதே; புத்திகொண்டு பார்த்திடுவாய்!
சென்றஉயிர் மீளாது;சென்ற அவர் மாண்டவரே ;
உந்தனுயிர் அழித்திட்டா லுன்பெற்றோர் வருந்திடுவர்.''
என்றசொற்கள செவியேற, எழில்முகத்தை நேர்நிமிர்த்தி,
அந்தரத்தி லொளிவீசும் அருங்கதி ரோன்காண,

கையெடுத்துக் கண்ணகியுங் கதிரோன்தன் முன்னீட்டி,
''வையகத்தை வாழ்விக்க வந்தஒளி வளத்தானே!
எளியவர்க்கும் வறியவர்க்கும் எல்லவர்க்கும் வழங்கிடுவாய்!
ஒளிமுதல்வா! உரைத்துவிடு உற்றபடி யுண்மைதனை !
என்கணவர் கள்வரா என்நாதர் கொலையுண்ண?''

எனவினவ, அதிசயமாய் எழுந்ததே அசரீரி!
''நின்கணவன் கள்வனலன்!'' இதைக்கேட்ட கண்ணகியும்
கண்மூடிக் கரங்குவித்துக், கதிரவனை வணங்கிவிட்டு,
விழிமூடி யிருந்து,தன் வசமிழந்து கிடந்தாளே,
மொழியடங்க, உடல் தளர, மாதரியு முடனிருக்க.

7. கற்பு ஒளிர் கண்ணகி

மாதுரிதன் உதவியினால் மயக்கிழந்த உத்தமியாள்
ஆதவன்தன் அசரீரி ஆய்மொழியைத் தானினைந்து,
துயர்நின்ற மனத்தினிடம் தன்கணவன் மறநெறியால்
உயிர்நீத்த தாலெழுந்து உறுத்தசினம் ஓங்கியெழத்
துடித்தெழுந்து, வெறித்தவிழி தீயுமிழ்ந்து வெளிநோக்க,

மடித்துவாய் மூக்கின்வழி முட்டுபெரு மூச்சதனைக்
கொல்லனுலைத் துருத்திபோற் கடுஞ்சூடு கொண்டுயிர்த்து
அல்லலெலா மகத்தடக்கி, அவைதந்த ஆவேசம்
தலைக்கேறக், கரந்துடிக்கத், தன்னுடலந் தள்ளாடத்,
தலைநிமிர்ந்து கூறிடுவாள்: "தருமநெறி தழைத்திருந்த

பாண்டிமா நாடதிலே பெருமதுரை வாழ்ந்துவரும்
பீடுபெற்ற பெண்டிர்காள்! பொறுமையுடன் கேட்டிடுவீர்!
பெருந்தனிகர் வணிகர்குலம் பிறந்து,மெங்கள் வாணிபத்தின்
பெருலாபப் பொருளிழந்து பழையஊர்ப் பற்றுவிட்டு
நெடுந்தூரம் போந்திங்கு, நீள்மதுரைப் பதியடைந்தோம்.

நடுநகரஞ் சென்று,என் நற்கணவர் சிலம்பொன்றை
விற்றுபொருள் வாங்கிவந்து, வாணிபத்தைத் தான்தொடங்க,
சுற்றித்திரிந் தவர்தனையே, சூதுசெயுங் கள்வரெனக்
குற்றந்தனைச் சுமத்திவிட்டுக் கொற்றவன்தன் காவலரும்
இற்றுடலங் கவர்தானும் இறந்துபடக் கொன்றிட்டார்;

என்னுயிர்க் கணவரையு மெழுப்பி,யவர் கூறிவிடும்
நல்லுரையைக் கேட்டிடவே, நானிதோ செல்கின்றேன்!
இதுசெயே னாயினுடன் இகழ்ந்திடுங்கள் எந்தனையே!
இதுஉறுதி சொல்கின்றேன், எரிகதிரோன் சான்றாக!"
எனக்கூறி மறுசிலம்பை எடுத்தவளும், மிகவிரைவில்

மனைவிட்டுத், தெருவிறங்கி, மனவேகத் துடனடந்தாள்.
மனவேகத் துடனடந்த மாதரசி, தெருக்கள்பல
கனவேகத் தினிற்கடந்து, கணவனார் கொலையுண்ட
வீதிதனைச் சனங்களுமே விரல்காட்டிச் சொல்லிவிட,
பீடிகையம் வீதியினிற் புகுந்தனளே விறுவிறென்று;

மக்கள்சூழ் இடங்கண்டு "மற்றதுவே உற்றவிடம்!
அக்கோயில் முன்னர்தான் அகமுடையார் அழிந்தாரோ ?"
என்றுநினைந் தோடினளே, இருகண்கள் நீர்சொரிய,
அங்கடைந்து, ஆருயிரர் அவலமாய் வெட்டுண்டு,
தரைமீது கிடந்திட்ட காட்சியினைக் கண்டவளும்

அறைந்துமுகம், அழுதங்கு, அவனுடல்மேல் விழுந்தழுது,
புலம்பினாள் பலபடவே, புரண்டழுதாள் பலர்காண;
அலம்பினாள் கண்ணீரால் அவனுடலைக் கைதழுவ.
அப்பொழுது அதிசயமாய் அவனுடலு முயிர்பெற்று,
"இப்பொழு தழுவதேன் எனதன்பே தணிந்திடுவாய்!

மதிபோன்ற உன்முகமும் மனங்குழம்ப வாடியதே!''
இதுசொல்லி யவன்கண்ணீர் அங்கையி னுல்துடைத்து,
உரமிழந்து நிலைசாய, உயிர்நீத்த நிலையடைய,
உயிரனையாள் அவனடிகள் உடன்பிடித்து வணங்கினளே.
வணங்கியஅக் கண்ணகியும் வரிந்துகட்டிக் கூறிடுவாள்;

குணமாறிக், கணவரையுங் கொலைசெய்தார் கொடுங்கோலால்;
''குணமலிந்த குன்றனையார் குலம்பிறந்த பாண்டியனுர்
அபலையா மெந்தனுக்கு அருந்துயர மிழைத்தாரே;
அவரைநா னுடனடைந்து, அவர்பிழையை அறிவிப்பேன்;
மதுரைநகர் மக்காள்நீர் மனங்கொண்டு கேட்டிடுங்கள்!

இதுசெய்து முடித்துவிடின் என்கடமை முடிந்துவிடும்;
நாதரையே பிரிந்திட்ட நீள்துயரம் பறந்துவிடும்;
நாதருயிர் நாடிப்பின் நான்செல்ல வழிகாண்பேன்''
இதுசொல்லி ஏகினளே நெடுஞ்செழியன் நெடுமனைக்கு.
இதுநிற்க,

நெடுஞ்செழியப் பாண்டியனின் நெடியஅரண் மனைதனிலே
நடுஉயர்ந்த மண்டபத்தில் நெறிமாறு மன்னவனும்
கற்பிலுயர் தேவியவள் கோப்பெருந் தேவியுமே
சிற்பக்கலை சிறந்துநிமிர் சிங்கவா தனமிருந்தார்.
சிங்கவா தனமிருந்த சிறந்தகுணத் தேவியவள்

மங்கிவிட்ட மனத்தவளாய், முகந்திரிந்து, மன்னனிடம்
தயங்கியே கூறிடுவாள் தன்துயரங் கூர்ந்திடவே;
''மயங்குதே சிந்தையதும மனமுமிகச் சலித்ததுவே;
என்னுள்ளந் துடிக்குதையோ! எவ்வாறு தெரிவிப்பேன்?
என்மனத்து வாழ்மன்னு! எந்தனது வாழ்வுடையாய்!

சொல்லவாய் வரவில்லை; சென்றஇர வதனில்நான்
நல்லபடிக் கண்ணயர, நான்கண்ட கனவதனைக்
கேளுங்கள் கவனித்து! குடையோடு கோல்வீழ,
ஆடியது அரண்மனையின் ஆராய்ச்சி மணியுமிக,
எண்திசையும் பரப்பியொலி எழுந்ததே பயமளித்து;

விண்செல்லுங் கதிரவனை வல்லிருளே கவ்வியது;
இருள்படர்ந்த இரவினிலே இந்திரவில் வானமிட
மருண்டதே என்மனமும்; மககளுந்தா னேங்கினரே
விளங்குஒளிப் பகற்பொழுதில் விண்மீன்கள் பட்டுவிழ,
கலங்கினேன் கண்விழித்து; கடுங்குறிகள் இவைதாமும்

வருந்துன்பங் காட்டினவோ வல்வினையுங் கூடிவிட?
வருத்தமே வந்துவிடும் வளமழிய. மனமுறிய,
என்செய்வேன் என்னன்பே! எவ்வாறு சகித்திடுவேன்?
துன்பத்தைத் தடுத்துவிட, துயரத்தைத் துடைத்துவிட,
வழிகாண வேண்டுமே, வாழ்குடிகள் வருந்தாமல்,

இழிசொல்லும் நங்குலத்திற் கெழுந்திடா திந்நாட்டில்''
எனச்சொல்லித் தவித்தனளே இளகிமனந் தேவியவள்.
மனக்கவலை யடைந்தானே மன்னவனும்; அப்பொழுது
வாயிற்கா வலனங்கு வந்தடைந்து வணங்கிமிக,
''வாயிற்கடை யொருபெண்ணும் வளர்ந்தசினங் கொண்டவளாய்.

உள்ளமிகக் கொதித்தவளாய், உறுதிமிகக் கொண்டவளாய்,
கள்வனாய்க் கொலையுண்ட கணவன்தனை யிழந்தவளாய்,
ஒருசிலம்பு கைப்பிடித்து, உறுத்த நோக்குடையவளாய்,
அரசரையே கண்டிடவும் ஆசைப்படு கின்றாளே;
ஆணையென்ன?'' எனவேண்டிக் காவலனு மியம்பிவிட,

தானைமன்னன், ''அவளைநீ தயங்காது அழைத்துவா!''
என்றாணை யிட்டிட்டு, ''என்தேவி ஈதேதோ
துன்பந்தனைக் கூட்டிவிடுந் துயரந்தரு கால''மென,
அப்பொழுது,
கண்ணகியு மனமெழுந்த கடுஞ்சினத்தை முகங்காட்ட,

பண்விட்ட நடையினளாய்ப் பாண்டியன் நெடுஞ்செழியன்
அவைதனி லேபுகுந்து, ஆத்திரமே உருக்கொண்ட,
நவைமிக்க சொல்லினளாய் நின்றங்குச் சொல்லிடுவாள்:
''நீதிவிட்ட பாண்டியரே! நெறிமறந்த மன்னவரே!
ஈதொன்றைக் கூறிடுவேன் ஏழைமொழி கேட்டிடுக!

உயிர்க்கஞ்சி. உளந்துடித்துப், பறந்துவந்த புறாவினுக்கு
உயிர்ப்பிச்சை யளித்,ததனின் உயிர்காக்க அன்புடனே
தன்தசையைத் தானீந்த தியாககுணச் சிபிமன்னர்,
தன்கன்றைத் தேரரைக்கத், தான்துடித்து, மணியடித்து,
முறையிட்ட தாய்ப்பசுவின் குறைதீர்க்கத், தன்மகனை

அரைத்துவிட்டு, நீதிதனை யாதரித்த மநுமன்னர்,
ஆகியபேர் அரசர்குலம் ஆட்சிசெயுஞ் சோழர்வாழ்
பூம்புகார்ப் பட்டினத்தில், பெருகுடியர் வணிகரவர்
கூம்பிடா வணிகமா சாத்துவனார் சீர்மகனார்,
எந்தனது கைப்பிடித்த குணமணியாங் கணவரவர்,

முந்தைவினை வசப்பட்டு, முந்துற்ற வாணிபமும்
சிறப்பழியச், செல்வநிலை சிதற,என் சிலம்பெடுத்து,
அறவிலைக்கு விற்றுபொருள் பெறநினைந்து வீதிவர,
அரண்மனைச் சிலம்புகள வாடினா ரெனப்பழியைப்
பரபரப்பாய்ச் சுமத்தி,யுடன் படுகொலையே செய்வித்த

பழியுமதே பாண்டியரே! பதிலேது புகன்றிடுவீர்?
பழுதேது மென்கணவர் புரிந்தநிலை யென்றறிவேன்''
எனக்கேட்ட கண்ணகியை இளநகையே கொண்டரசர்
''மனமாறு பட்டேநீ மதிகலங்கிப் பேசிவிட்ட
பெண்ணானாய்! கேட்டிடுவாய் பிறர்பொருளைக் களவாடிக்,

கண்மறைத்த கள்வனையுங் கொல்லுவது தவறில்லை;
நெறிமீறித் திரிவாரை நெறிவழியில் தண்டித்து
நெறிநீதி நாட்டுவது நல்லரசன் கடனன்றோ?''
என்றரசப் பாண்டியனு மினிதாகப் புகன்றிடவே,
''நன்றுநீர் நாட்டிவிட்ட நடுநீதி காட்டுகிறேன்;

என்சிலம்பி லுள்ளபரல் என்னபரல் அறிவீரோ?
என்சிலம்பி லிருப்பனவு மாணிக்க மணிகள்தாம்''
இதுமொழிந்த பெண்ணவளை ஏறெடுத்துப் பார்த்திட்டு,
மதுஉண் டானைப்போல் மனங்குழம்பி மன்னவனும்,
காவலனை யழைத்திட்டுக், ''கள்வனிடம் அடைந்திட்ட

காற்சிலம்பைக் கொணர்''கென்று குரலெடுத்துக் கூறிவிட்டு,
''உன்சிலம்பில் மாணிக்கம் உண்மையாய்ப் பரலானால்,
என்சிலம்பில் முத்துமணி யேபரலாய் உள்ளனவே''
எனக்கூறக், காவலனுங் காற்சிலம்பைக் கொண்டுவரக்,
கணப்பொழுதிற் கண்ணகியுங் கையிலுடன் பிடித்தெடுத்து,

அரசன்முன் னோங்கிநிலத் தடித்தாளே ஒளிச்சிலம்பை
பரல்சிதறி யுடைந்தஅது மாணிக்க முதிர்த்ததுவே;
தெறித்திட்ட பரலதுவும், தென்னவன்றன் புறத்தெழுந்து
''நெறிதவறி நடந்தவனா நீயே''யென் றுரைத்ததுபோல்,
மன்னவன்றன் முகத்தடித்து, மண்டபத்தில் தரையில்விழ,

தென்னவனுந் திகைத்திட்டான், தானிழைத்த தவறறிந்தான்
சூழ்ந்தநிலை யுணர்ந்தவனும் சோகமனம் ஊர்ந்தவனாய்
''தாழ்ந்ததே என்குடையுந், தளர்ந்ததே என்கோலும்,
பொற்கொல்லன் மோசடியைப் போற்றி,யவன் மொழிந்திட்ட
சொற்கேட்டு அறிவிழந்தேன்; சொற்களையு மாயவில்லை;

அற்பனவன் கூறியதை யாராயா தாணையிட்டேன்;
விற்பன்னர் மன்னர்குல விறல்வேந்தர் பாண்டியரும்,
வழிவழியே வழங்கிவந்த வளர்நீதி முறைதவறி,
இழிவாக ஆணையிட்டு, என்றென்று மாறாத
பழியேற்ற பாதகனான், பாண்டிகுல மன்னவரில்

இழிந்தசெயற் கள்வனான்; இதிலேதுங் குற்றமில்லை;
தொன்றுதொட்டுக் கோல்கொண்ட தென்னாட்டுக் காவலதும்
இன்றுமுத லென்முதலே இழிவுற்ற தென்கொடுமை!
கெடுமதியேன் கடை யுணர்வேன் கெடுகஎன் ஆயுள்!" என
நெடுஞ்செழியன் முடிவீழ, நடுங்கிவீழ்ந் துயிர்நீத்தான்.

பார்த்திருந்த பாண்டிமா தேவிக்கோப் பெருந்தேவி,
ஆர்ப்பரிப்பு ஏதுமின்றி, அருந்துயரம் ஏறிநிற்க,
மன்னன்றன் உடல்விட்டு மறைந்திட்ட உயிர்தேட,
தன்னுயிரை விடுபவள்போல், தன்கணவ ரடிவீழ்ந்து,
உடலிற்கண முயிரிருக்க உளமிசையா உத்தமியாள்,

படுஉடலுங் கீழ்வீழப், பொன்னுயிரை நீத்தாளே.
இதுகண்டும்,
கண்ணகிதன் கோபக்கனல் குறைந்திடா ததுகண்டு,
பெண்ணரசிப் பாண்டிமாப் பெருந்தேவி பார்த்துடனே,
"பத்தினிகள் பிறந்திருந்த புகாரினிற் பிறந்தநான்

பத்தினியேன் உண்மையெனில், பதியைக்கொலை புரிந்திட்ட
பாண்டிகுலத் தரசருடன், பாண்டிமா தேவியுடன்,
பாண்டிநகர் மாமதுரை பட்டழிந்து மறைந்திடுக !"
எனச்சபித்து, அங்குவிட்டு, ஏகினளே நகரததில்
மனம்போன போக்கினிலே, மாத்துயரம் பொங்கிடவே,

தலைவிரித்து, மனஞ்சிதறித், தனித்தேகும் மங்கைமுனே
அலைந்தெங்குந் திரிவாளுக் காதரவு தந்திடவே,
அசரீரி வாக்கெழவே, அதையூன்றிக் கேட்டாளே;
"இசைபெற்ற காரிகையே! இதைச்சற்றுக் கேட்டிடுவாய்!
பாண்டியன்மீ தெழுந்தசினம் போக்கிமெய் அமைதிபெறு!

ஆண்டில்நீ குறைந்திருந்தும் அறிவில்மிக நிறைந்துள்ளாய்.
உன்பழைய பிறப்பினில்லை நிகழ்ந்திட்ட நிகழ்ச்சிகளை
உன்மனத்துப் பதித்திடவே உளங்கொண்டு புகல்கின்றேன்;
முன்கலிங்கச் சீர்நாட்டிற் கபிலபுரம், சிங்கபுரம்
என்றஇரு பட்டணங்கள் இருந்தனவே பகைகொண்டு,

கபிலபுரக் குடிமகனும் கனவறியன் சங்கமனும்,
அவலமொழித் திடவேண்டி, அவன்மனைவி மக்களுடன்,
சிங்கபுரம் வந்தடைந்து, சிறுகடையும் வைத்தானே;
அங்காடி இருந்தவனும், அருங்கலன்கள் விற்றானே.
அவ்வீதி புகுந்துவந்த அதிகாரி பரதனுந்தான்,

இவ்வணிகன் தான்பார்த்து "இவன்பகைவன் நாட்டானே;
ஊர்நிலையை உணரவந்த ஒற்றனிவன் உண்மையிலே;
போர்தொடுக்கப் பகைவருக்குப் பொருந்துவன சொல்லிடுவான்'
என்றுதன் மனநினைந்து, என்னஎன்றும் கேளாது,
தன்காவ லரைக்கொண்டு தனிவணிகன் சங்கமனைச்

சிறைசெய்து, அரசனிடஞ் சொல்லி,யுடன் சங்கமனைச்
சிரச்சேதஞ் செய்திட்டான், சிங்கபுரங் காத்துவிட,
சங்கமனின் சதியாவாள், சிறந்தகுண நீலியென்பாள்,
அங்கமெலாம் நொந்திடவே, அருந்துயரம் நெடிதேறி,
அழுதுகண் ணீர்சொரிந்து, அகங்குழைந்து, நலிந்திட்டாள்;

புழுதியிலே புரண்டழுதாள்; இவ்விதமே பதினான்கு
நாள்கடத்தி, நீள்துயரம் நீங்காமல், நாட்டின்மலை
நேர்பாதைத் தானேறி, நெடுஉச்சி தானின்று,
'என்கணவர் அழித்திட்டு, எனக்குத்துயர் அளித்திட்டோர்
என்துன்பம் மறுபிறப்பில் ஏற்றவரு மாளட்டும்!'

எனச்சபித்து, மலையுச்சியிட'மிருந்து மடுவீழ்ந்தாள்.
உனதுகோ வலனே'அவ் ஊறுசெய்த பரதன்காண்!
கொலைப்பாவம் சூழ்ந்ததனால், கோவலனுங் கொலையுண்டான்;
அலைப்புறேல் கண்ணகியே! அருந்துயரங் கழித்திடுவாய்!"
இம்மொழிகள் செவியேற்ற சினமடந்தை சினம்விட்டாள்,

தம்வினையின் தீப்பயனைத் தாங்குதலே தகுதி'யென.
வையைநதிக் கரைவழியை வகையாக கண்ணகியும்
ஐயமிலா மனத்துடனே, அங்குவிட்டு மேற்றிசையில்
நடந்தவளுஞ் சென்றாளே, நெடுவழியிற் சென்றாளே.
கடுந்துயரம் நடந்தவளும், கஷ்டமெலாந் தான்பட்டு,

திருச்செங் குன்றமென்ற திருமலையின் மீதேறி,
அருங்களைப்பு தீர்ந்துவிட அங்கிருந்த வேங்கைமர
அடிநிழலில் தங்கிவிட்டாள்; அமைதிமனங் கொண்டுவிட்டாள்,
வடிவுடைய தன்கணவன் வளமுகத்தை தானினைந்தே.
இன்னிலையிற் பதினான்கு பகற்பொழுது போக்கியவள்,

முன்னிரவுப் பொழுதினிலே, முகவொளியும் பொலிந்திடவே
தன்கணவன் உருக்கண்டு, தாவிபற்றி, யுடன்சென்றாள்.
தண்தமிழ் நாட்டினின்றும் தான்பிரிந்து சென்றுவிட்டாள்,
தமிழ்நாட்டுத் தனிக்கற்புத் திறங்காட்டித், தன்பெயரைத்
தமிழகத்துப் பெண்டிரெலாம் தம்மனத்துப் புகழ்ந்திடவே.

தெய்வநிலை பற்றிவிட்டாள்; தனிப்புகழே பெற்றுவிட்டாள்,
பொய்மைவிட்ட பத்தினியாள் பெண்களினப் பேரரசி!
காவிரிப்பூம் பட்டினத்தின் கண்ணகியாள் பத்தினியாள்
யார்மனத்தும் நிலையாக என்றென்றும் நிற்கின்றாள்!
புகாரிலே,

மதுரைமா நகரத்தில் மகனிறந்த செய்தியினை
மாசாத்து வான்மனைவி மனமறிந்த வுடனிறந்தாள்.
அவ்வாறே, மாநாய்க்கர் மனையாளும் மரித்தாளே.
இவ்வுலக வாழ்விதுவோ என்றுகோ வலனுடைய
தந்தையுடன் மாமனுந்தான் துறவறமே மேற்கொண்டு

சிந்தைமிக நைந்தவராய்ச், சுற்றினரே நாடெங்கும்.
தனைவிட்டுப் பிரிந்தகன்ற தோழிதனைத் தேடியெங்கும்,
மனைவிட்ட தேவந்தி, மதுரைநகர் தனையடைந்து,
கண்ணகிக் கங்குற்ற கொடுமைகளைக் கேட்டறிந்து,
கண்ணகியாள் சென்றவழி கடுகியே சென்றாளே.

நெடுநாளைக் கால்நடையாய்க் கடத்தியவள் கடைசியிலே,
நெடுமலைசூழ் சேரநா டடைந்தாளே; அங்கவளும்
சேரபதி செங்குட்டுவன் சிறப்புறவே கோயிலிட்டுப்,
பேர்பெற்ற இமயமலைப் பெருங்கல்லிற் சிலைவடித்துப்
பூம்புகார்ப் பத்தினியாம் புகழுடைய கண்ணகிக்குத்

தீம்பூ சனைகளையே செய்துவருஞ் சிறப்புணர்ந்து,
அக்கோயில் தானடைந்து, அருந்தோழி தானினைந்து,
பக்கநின்று புலம்பினாள் பதறி,மனம் புண்படவே;
அப்பொழுது கோயிலிலே அசரீரி கூறியதே;
அக்குரலுங் கண்ணகியின் குரலதுவாய்க் கேட்டதுவே!

''தேவந்தி! கலக்கமொழி; தங்கிவிடு கோயிலிலே!
தேவர்புகழ் தமிழகத்தின் திருமிகுந்த, முன்னாடாய்
சேரநா டதனுடனே சோழ,பாண் டியநாடும்
சேரஅவை புகழ்படைக்கச், செல்வமெலாம் படைத்திருந்த
பூம்புகார்ப் பெரும்பதியும், புறமதிள்சூழ் மதுரையதும்

கூம்புமலை வஞ்சிநகர், கூறுகின்ற மூவிடத்தும்
என்வாழ்வு நிகழ்ந்துளதால், என்தோழி! நீகேட்பாய்!
முன்னாடும் வளங்கொழிக்க வாழியே பன்னாளும்!
சோழநா டென்றென்றும் சோறுடைய நாடாக!
சேரநா டென்றென்றும் செம்மலையின் பொருள்குவிக்க!

பாண்டிநா டென்றென்றும் பண்புதமிழ் புரந்திடுக!
ஆண்டுபல வாழ்ந்திடுக ஆனஇந் நாட்டினரே,
பொன்னிகாண் மணலினுமே, புகழ்நெய்தல் மணலினுமே,
விண்ணிலுள்ள கோளங்கள் எண்ணிக்கைக் கணக்கினுமே!
வாழுமக்கள் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்திடவே,

வாழுநெறி பற்றியவர், வன்துன்ப முற்றிடினும்,
உள்ளத்தி லுரம்விடா துண்மைநிலை பிடித்தொழுகி,
எள்ளளவு மிடரின்றி இனிதுவாழ்ந் திருந்திடுக!''
என்றவாழ்த் துரைகேட்டு, இன்பமனத் திடையூற,
அன்றுமுதல் தேவந்தி அக்கோயில் தான்தங்கி,

கற்பரசிக் கண்ணகியாள், பூம்புகார்ப் பத்தினியாள்,
கற்சிலையைக் கண்ணகியாய்க் கொண்டாளே வழிபடவே.